வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    10.05.2026 ஞாயிற்றுக்கிழமை    இதழ் : 124    பக்கங்கள் : 16

## தமிழகத்தில் புதிய முதல்வராக விஜய்!

### நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப் பணிப்பு

### இன்று காலை 10 மணிக்கு பதவியேற்பு விழா



சென்னை, மே. 10

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜயை தமிழகத்தின் முதலமைச்சராக நியமிப்பதற்கான உத்தரவை ஆளுநர் அர்லேகர் நேற்று வழங்கியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் இந்திய முஸ்லிம் லீக் ஆகியவற்றின் ஆதரவை அடுத்து , த.வெ.க. ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை எம்.எல்.ஏக்கள் ஆதரவு கிடைத்த நிலையில் தமிழ்நாடு ஆளுநர் அர்லேகரை நேரில் சந்தித்தார் த.வெ.க. தலைவர் விஜய்.

ஆளுநருடனான சந்திப்பின்போது விடுதலை சிறுத்தைகள், இந்திய முஸ்லிம் லீக் கட்சிகளின் ஆதரவு கடிதத்தை விஜய் வழங்கினார். பெரும்பான்மை எம்.எல்.ஏக்களின் ஆதரவு 15

## புதிய அரசு அமைவதற்கு தி.மு.க. இடையூறாகாது!

### முன்னாள் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, மே. 10

புதிய அரசு அமைவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் இடையூறாக இருக்காது எனத் தெரிவித்துள்ள திராவிட முன்னேற்றக்கழக தலைவர் மு.க. ஸ்டாலின், புதிய அரசுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக்கழக தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தியோகபூர்வ முகநூல் 15

## விடுதலை சிறுத்தைகள் நிபந்தனையற்ற ஆதரவு


சென்னை, மே. 10

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் தலைமையிலான புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தனது உத்தியோகபூர்வ ஆதரவை வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஆதரவுக் கடிதத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் 15

## யாழ்.போதனா வைத்தியசாலையில் பெரும் தீ! பல மணிநேர போராட்டத்தின் பின் கட்டுக்குள்!!

### பல மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் நாசம்



யாழ்ப்பாணம், மே. 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து சுமார் 5 மணி நேரப் போராட்டத்தின் பின் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் , விபத்தினால் பல மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 1 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டு , அப்பகுதி தீப்பற்றி எரிந்தது.

தீயை அணைக்க வைத்தியசாலை ஊழியர்கள் முயற்சிகளை மேற்கொண்டதுடன், மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர், இராணுவத்தினர், விமானப் படையினர், பொலிஸார், மின்சார சபையினர் உள்ளிட்ட பல தரப்பினரும் சம்பவ இடத்துக்கு 15

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகள் உடன் வரும்!

### கடற்தொழில் அமைச்சர் நடவடிக்கை



யாழ்ப்பாணம், மே. 10

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை உடனடியாக பெற்றுக்கொடுக்கவும், களஞ்சியசாலையை உடனடியாக புனரமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்து ள்ளார்.

தீ விபத்துக்குள்ளான வைத்தியசாலையின் 15

## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு உள்ளூராட்சி சபைகள் தயாராகவேண்டும்!

### வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே. 10

திடீர் திடீரென மாற்றமடையும் காலநிலையால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், உள்ளூராட்சி மன்றங்கள் தங்களைத் துரிதமாகத் தகவமைத்துக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மட்டத்தில் காலநிலை ஆளுகையை வலுப்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த உணர்வுள்ள உள்ளூர் ஆட்சி முன்னோடித் திட்டம் தொடர்பான இரண்டு நாள் வதிவிடச் செயலமர்வு, யாழ்ப்பாணத்தில் நேற்று 15

## 60 வீதமான மருந்துகள் தீயில் கருகி நாசமாகின!

யாழ்ப்பாணம், மே. 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால், அங்கு இருந்த இருந்த 60 வீதத்துக்கும் அதிகமான மருந்துகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ச. சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

போதனா வைத்தியசாலை மருந்து களஞ்சியத்தில் நேற்று சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டிருந்த நிலையில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 15

## செம்மணி அகழ்வு பணி ஜூன் 1 வரை நிறுத்தம்!

யாழ்ப்பாணம், மே. 10

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று சனிக்கிழமையுடன் நிறுத்தப்பட்டு, மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமான நிலையில், நேற்று சனிக்கிழமை வரையில் 12 நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன.

இந்நிலையில் நேற்றுடன் அகழ்வுப் 15

## எயார்பஸ் விசாரணை; மகிந்தவுக்கு அழைப்பு



கொழும்பு, மே. 10

எயார்பஸ் விமான ஒப்பந்தம் தொடர்பான விசாரணைக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அவர் மே 12ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி விளக்கம் வழங்கவேண்டும் என அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதம் நேற்று அவரது கார்ல்டன் இல்லத்துக்கு வழங்கப்பட்டதாக பொது ஜன பெரமுன கூறியுள்ளது.

கடந்த வாரம் சில ஊடகங்களில் மகிந்த 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வியட்நாம் துணை பிரதமர் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு



கொழும்பு, மே 10

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா மற்றும் வியட்நாம் துணை பிரதமர் உள்ளிட்ட தூதுக்குழுவினருக்கு இடையில் விசேட இராஜதந்திர சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தல் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கு வியட்நாம் அரசாங்கம் வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கும், தற்போதைய விஜயத்துக்கும் பாதுகாப்புச் செயலாளர் தனது நன்றிகளை தெரிவித்து கொண்டார்.

இரு நாடுகளுக்கும் பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இலங்கை பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கு வியட்நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை அந்த நாட்டு துணை பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து தனது பாராட்டுக்களைத் தெரிவித்த அவர், பாதுகாப்பான மற்றும் கூட்டுறவுடனான எதிர்காலத்துக்கான இரு நாடுகளின் பொதுவான இலக்குகளை இந்த சந்திப்பின்போது மீண்டும் உறுதிப்படுத்தினார். (எ)

# 5 சதவீத மின்சார நுகர்வோருக்கான மின்சார கட்டணம் 18 வீதம் உயர்வு

கொழும்பு, மே 10

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கு அமைவாக, 180 அலகுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீட்டுப் பிரிவினரின் மின்சாரக் கட்டணத்தை 18 சதவீதத்தால் அதிகரிக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இருப்பினும், 180 அலகுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் வீட்டுப் பிரிவினரின் மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மின் உற்பத்திச் செலவு அதிகரித்தமையால் இந்த மற்றும் அடுத்த காலாண்டுகளில் சுமார் 38 பில்லியன் ரூபாய் பற்றாக்குறை தொகை ஏற்படுகின்றமை உள்ளிட்ட மூன்று பிரதான காரணிகளை முன்னிலைப்படுத்தி மின் கட்டணத்தை 18 சதவீதத்தால் உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கம் 15 பில்லியன் ரூபாய் நிவாரணத்தை வழங்க எழுத்துப்பூர்வமாக இணங்கியுள்ளதால், இந்த அதிகரிப்பு 5 சதவீதமான மின் நுகர்வோரை மாத்திரமே தாக்கம் செலுத்தும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டின் 95 சதவீதமான மின் நுகர்வோருக்கு இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு பொருந்தாது என ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டது

கொழும்பு, மே 10

2026 ஏப்ரல் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் பெறுமதி மீண்டும் 7 பில்லியன் அமெரிக்க டொலர் மட்டத்துக்கு கீழ் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, 2026 மார்ச் மாத இறுதியில் 7026 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் அளவு, ஏப்ரல் மாத இறுதியில் 6759 மில்லியன் டொலர்கள் வரை குறைந்துள்ளது.

கையிருப்பு சொத்துக்களின் பிரதான அங்கமான வெளிநாட்டு செலாவணி கையிருப்பும் ஏப்ரல் மாதத்தில் 6800 மில்லியன் டொலர்களிலிருந்து 6505 மில்லியன் டொலர்கள் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேபோல் மத்திய வங்கியின் தங்க கையிருப்பும் 222 மில்லியன் டொலர்களிலிருந்து 219 மில்லியன் டொலர்களாகக் குறைவடைந்துள்ளது.

ஐந்தரை ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக 2026 பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 7 பில்லியன் அமெரிக்க டொலர் எல்லையைத் தாண்டியதுடன் அந்த மாத இறுதியில் அது 7284 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியிருந்தது.

எவ்வாறாயினும் மார்ச் மாதத்தில் அது 7026 மில்லியன் டொலர்கள் வரை 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன்படி ஏப்ரல் மாதத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் உத்தியோகபூர்வ கையிருப்பில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (எ)

# சூதாட்டத்தில் தோற்ற நண்பருக்காக பாடசாலை மாணவன் செய்த மோசடி

கொழும்பு, மே 10

சூதாட்டத்தில் பணத்தை இழந்த தனது நண்பருக்கு உதவுவதற்காக, வாடகைக்கு கார் எடுத்து எருமைக்கன்றுகளைத் திருடி, அவற்றை ஆட்டு இறைச்சி என விற்பனை செய்து வந்த பாடசாலை மாணவர் ஒருவரை அம்பலாங்கொடை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த சில நாட்களாக அம்பலாங்கொடை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த மாடு திருட்டு தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தல்கஸ்கொட - கொடஹேன பகுதியில் வைத்து குறித்த மாணவர் கைது செய்யப்பட்டார்.

அம்பலாங்கொடையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் பயிலும் அந்த மாணவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், மேலும் இரு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அக்ம்பலாங்கொடை மற்றும் வதுகெதர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களான இந்த மாணவர்கள் திலகபுர பகுதியில் 3 மற்றும் 8 மாத வயதுடைய இரு எருமைக்கன்றுகளை இரு கார்களில் ஏற்றிச் சென்று, கரந்தெனிய - பனாபிட்டிய பகுதியிலுள்ள ஒருவருக்கு விற்பனை செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரையும் கைது செய்த பொலிஸார், காட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த இரு எருமைக்கன்றுகளையும் மீட்டுள்ளனர்.

மாடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட இரு கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# போதைப்பொருள் தடுப்பு மேலும் 817 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 10

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், வெள்ளிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 817 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 13 பேரும் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 796 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் நால்வர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோ 513 கிராம் ஹெரோயின், 04 கிலோ 467 கிராம் ஐஸ், 05 கிலோ 193 கிராம் கஞ்சா, 49 கஞ்சா செடிகள், 23 மில்லி கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 758 போதை மாத்திரைகள், 522 கிராம் மதன மோதகம் மற்றும் 181 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பொலிஸ் நிலையத்தில் கம்மன்பில முன்னிலை

கொழும்பு, மே 10

திறைசேரி அதிகாரியின் மரணம் தொடர்பில் வாக்குமூலம் வழங் குவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்றுக் காலை குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்தார்.

சமீபத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்திய அவர் குறித்த மரணம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்திருந்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதய கம்மன்பிலவின் அந்த அறிக்கை தொடர் பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில் வாக்குமூலம் வழங்குவதற்காக கம்மன்பில பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்தார்.

# பெண்களின் நீதிக்கான தேடல் கண்காட்சி



திருகோணமலை, மே 10

பெண்களின் நீதிக்கான தேடல் கண்காட்சி திருகோணமலை மாநகர சபை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நேற்று சனிக்கிழமை மாலை 6.00 மணி வரை நடைபெற்றது.

இதில் பெண்களின் வாழ்வியல் தொடர்பான பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஒட்டு மொத்த பெண் சமூகத்துக்கான நீதி வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பிலும் உணர்வுபூர்வமாக இங்கு காட்சிப்படுத்தப்பட்டன. இதில் பல பெண் சமூக சிவில் செயல்பாட்டாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர். (எ-12)

# பொலிஸ் சுற்றிவளைப்பு: ஒரே நாளில் 540 பேர் கைது

கொழும்பு, மே 10

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை பொலிஸார் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது, 540 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கையின்போது 27,615 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 21 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 248 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 134 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 76 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 49 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4146 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இம்முறை சிறுபோகத்தில் உரத்தட்டுப்பாடு ஏற்படாது

## அமைச்சர் லால் காந்த உறுதி

கொழும்பு, மே 10
இம்முறை சிறுபோகத்தில் எந்தவொரு பயிர்ச் செய்கைக்கும் உரத் தட்டுப்பாடு ஏற்படாது என்று விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

கன்னொருவை தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் மையத்தில் நேற்று முன்தினம் உரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது சிறுபோகத்துக்குத் தேவையான உர இருப்புக்கள் நாட்டில் உள்ளதுடன், அவை விவசாய சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தனியார் துறையினரின் உர விநியோக நடவடிக்கைகளையும் மீண்டும் வழமை போன்று ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

சில பகுதிகளில் விநியோகத் தாமதங்கள் காணப்பட்டாலும், அவற்றைத் தீர்த்து இனிவரும் காலங்களில் எந்தவித தடையுமின்றி உரத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

அதேபோல், உரம் தொடர்பில் போலியான மற்றும் தவறான தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான உரத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன், அரச மற்றும் தனியார் துறையினர் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அதிக விளைத்திறன் கொண்ட புதிய தலைமுறை உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், மண் பரிசோதனைக்குப் பின்னர் உரமிடும் முறையை மேலும் விரிவுபடுத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

# கபில சந்திரசேனவின் மரணம் பற்றி இப்போது உறுதியாகக்கூற முடியாது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 10
சிறீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பில் இந்த நேரத்தில் எந்தவித உறுதியான கருத்தையும் தெரிவிக்க முடியாது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

மரணப் பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே இது குறித்து உறுதியான கருத்தை வெளியிட முடியும் என அவர் குறிப்பிட்டார்.

'இந்த மரணம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது மரணப் பரிசோதனை இடம்பெற்று வருகின்றது. அதன் பின்னர் சட்ட வைத்திய அதிகாரிகள் விடயங்களைத் தெளிவுபடுத்துவார்கள். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் அனைத்து கோணங்களிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.'

கேள்வி: பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதே அவரை கைது செய்திருந்தால் இது நடந்திருக்காது அல்லவா?

பதில்: 'பொலிஸார் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தனர். ஏனெனில் பொலிஸாருக்கு இது குறித்து முன்பே தெரியவந்தது. இரவுக்குள் இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என்று பொலிஸார் நினைத்திருக்க மாட்டார்கள். மறுநாள் காலையில் அவரை கைது செய்யத் திட்டமிட்டிருக்கலாம். அவர் ஏற்கனவே பொலிஸ் காவலில் இருந்து விடுதலையான ஒருவர், நீதிமன்ற உத்தரவும் இருந்தது. இது குறித்து பொலிஸ் மா அதிபரிடம் வினவுங்கள். எவ்வாறாயினும், இது தொடர்பில் இப்போது உறுதியான கருத்தைக் கூற முடியாது. மரணப் பரிசோதனையின் பின்னரே எதனையும் கூற முடியும்.' என்றார். (எ)

# சுற்றுலா பயணிகள் வருகை 9 இலட்சத்தை தாண்டியது

கொழும்பு, மே 10
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 9 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 6ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 904,855 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் அதிகமானோர் இந்தியப் பிரஜைகளாவர். அவர்களின் எண்ணிக்கை 200,796 ஆகும். அத்துடன் பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, மே மாதம் முதலாம் திகதி முதல் 6ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 28,578 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்தத் தரவுகளை அவதானிக்கும் போது ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக குறைந்துள்ளது. (எ)

# பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று திறப்பு




கொழும்பு, மே 10
நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை மற்றும் கடும் மழை காரணமாக தெதுரு ஓயா, லுணுகம்வெஹெர மற்றும் இராஜாங்கனை ஆகிய பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று சனிக்கிழமை காலை முதல் திறக்கப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தெதுரு ஓயாவில் 4 வான்கதவுகள் தலா 3 அடி வரை திறக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக வினாடிக்கு 8,400 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

லுணுகம்வெஹெரவில் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கிரிந்தி ஓயாவைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் அதன் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 4,542 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

மேலும், தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ள அபாயம் குறித்து அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்கு திட்டங்களை விரைவுபடுத்தவும்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுரை

கொழும்பு, மே 10
மக்களின் முதன்மையான பிரச்னையாக உள்ள குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தேவையான திட்டங்களை விரைவாக கண்டறிந்து, அவற்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மக்களின் தற்போதைய தேவைகள் குறித்து அவதானம் செலுத்தி திட்டங்களை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, மக்களுக்கு போதுமான குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத்த முடியாமல் போவதால் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தேசிய குடிநீர், சமூக நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டங்களின் தற்போதைய நிலைமை, வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் முன்னேற்றம் மற்றும் தேவைகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக தொடர்புடைய அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற போதே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

குறித்த திட்டங்களை விரைவாகக் கண்டறிந்து, அவை ஆரம்பிக்கப்படக்கூடிய திகதி, தேவையான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவை நிறைவடையும் திகதி குறித்த அறிக்கையைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, இதன்போது எக்காரணம் கொண்டும் நிதிப் பிரச்னையை ஒரு தடையாகக் கருத வேண்டாம் எனவும், திட்டங்களைத் தயாரித்து அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் குறித்த கோரிக்கைகளை முன்வைக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

மேலும், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது வெளிநாட்டுப் கடன்களுக்காகக் காத்திருக்காமல் முடிந்த வரை உள்நாட்டு நிதியைக் கொண்டு அவற்றை நிறைவு செய்வதில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி திட்டங்களைத் தயாரிப்பதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களைப் பணியமர்த்திக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, மொனராகலை, கண்டி, கம்பளை, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை உள்ளிட்ட மாவட்டங்களில் மக்களின் குடிநீர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள், அவற்றின் முன்னேற்றம் மற்றும் அவற்றைச் செயல்படுத்தும்போது எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து ஜனாதிபதி இங்கு தனித்தனியாக கேட்டறிந்தார். (எ)

# போதைப்பொருட்களுடன் இளைஞன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 10
மாதிவெல பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண தெற்கு பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 58 கிராம் ஹெரோயின் மற்றும் 3 கிலோ 34 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட 26 வயதுடைய சந்தேகநபர் மாதிவெல பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், மேல் மாகாண தெற்கு பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கபில சந்திரசேனவின் மரணத்தை நாங்கள் மூடிமறைக்க மாட்டோம்

## ஆளுந்தரப்பு எம். பி. சந்தன சூரியாராச்சி உறுதி

கொழும்பு, மே 10

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம் குறித்து அவசரப்பட்டு எந்தவித முடிவுகளுக்கும் வரத் தேவையில்லை. கடந்த கால ஆட்சிகளைப் போலன்றி எமது அரசாங்கத்தில் எந்தவொரு சம்பவமும் அரசியல் தேவைகளுக்காக மூடிமறைக்கப்படாது என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவை மீண்டும் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், பொலிஸாரின் தாமதம் காரணமாகவே இந்த மரணத்தைத் தடுக்க முடியாமல் போனதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. உண்மையில் எமது நாட்டில் ஒரு பெரிய துரதிர்ஷ்டவசமான நிலை உள்ளது.

ஏதாவது ஒரு சம்பவம் நடந்தவுடன், எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் மிகவும் அவசரப்படுகிறார்கள், பதற்றமடைகிறார்கள். உடனடியாகப் பலவிதமான முடிவுகளையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கத் தொடங்குகிறார்கள். ஆனால், நாம் மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு அரசாங்கமாகவும், பொறுப்புள்ள மக்களாகவும் செயல்பட வேண்டும்.

நாட்டில் ஒரு மரணமோ, ஊழலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு குற்றச்செயலோ நடந்தால், அது குறித்து விசாரணை நடத்தும் நிறுவனங்கள், புலனாய்வாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் தங்களது முறையான ஆய்வுகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருவதை அடிப்படையாகக் கொண்டே நாம் ஒரு நிலைப்பாட்டுக்கு வர முடியும்.

எனவே, இந்தச் சம்பவம் குறித்தும் பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் முறையான விசாரணைகள் முடிவடைந்த பின்னரே எம்மால் இறுதி முடிவைக் கூற முடியும்- என்றார். (எ)

# நீதிமன்ற வெற்றிடங்களை உடன் நிரப்ப வேண்டும்

கொழும்பு, மே 10

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலவும் வெற்றிடங்களை அரசாங்கம் உடனடியாக நிரப்ப வேண்டும். கீழ் நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகள் உயர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் சேவையாற்ற எதிர்பார்த்துள்ளார்கள். அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் பேராசிரியர் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கலாநிதி, பேராசிரியர் பட்டங்களை வழங்கும் பல நிறுவனங்கள் உள்ளன. எவ்விதமான தகைமைகளும் இல்லாமல் தான் இந்த பட்டங்கள் வழங்கப்படுகின்றன. முறையான பரீட்சைகளுடன் தான் இவ்வாறான பட்டங்கள் வழங்கப்படுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு இந்த விடயம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பேராசிரியர் மற்றும் கலாநிதி பட்டங்கள் தற்போது ஒரு இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையான நிதிக்கு வழங்கப்படுகிறது. அவர்களின் பெயர்களுக்கு முன்பாக பட்டங்கள் எழுதப்படுகிறது. இவ்வாறான நிலையால் உண்மையில் படித்து பட்டம் பெறுபவர்களின் தகைமை மலினப்படுத்தப்படும் இதனை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.- என்றார். (எ)

# ரணில் ஜூன் மாதம் மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவார்!

## புதிய அரசியல் திருப்பங்கள் ஏற்படும்- ஹரின்

கொழும்பு, மே 10

முன்னாள் ஜனாதிபதி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வரும் ஜூன் மாதம் முதலாம் அல்லது இரண்டாம் வாரத்தில் மீண்டும் தீவிர அரசியலுக்கு கொண்டு வரவுள்ளோம். அதன் பின்னர் நாட்டின் அரசியல் களத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும் என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி பொதுச் செயலாளருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும் உலகளவில் வலது சாரிக் கொள்கை அல்லது மத்தியஸ்தப் பாதையில் பயணிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே இலங்கையிலுள்ள மிகச் சிறந்த தலைவர்கள் எனத் தெரிவித்த ஹரின், ஐக்கிய மக்கள் சக்தியுடன் சிறந்த இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகப் போரினால்தான் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு போன்ற பிரச்னைகள் ஏற்படுகின்றன என்று எரிபொருள் வரிசைகளில் நின்ற மக்கள் கூறினார்கள். ஆனால், உலகப் போர்ச் சூழல் இருந்தாலும் பங்களாதேஷில் விலை அதிகரிக்கவில்லை, இந்தியாவிலும் எரிபொருள் விலை உயர்த்தப்படவில்லை என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

இலங்கையில்தான் மிக அதிக அளவில் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. எரிபொருள் வரிசைகளில் நின்று கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவாகப் பேசும் சில ஓட்டோ சாரதிகள் போன்றவர்கள் இது உலகளாவிய பிரச்னை, நாம் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். இதனால்தான் இலங்கைக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.- என்றார். (எ)

# நாட்டின் பெரும்பாலான இடங்களில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்யும்

கொழும்பு, மே 10

நாடு முழுவதிலும் நிலவுகின்ற மழையுடனான வானிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு தொடரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை மற்றும் மன்னார் மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும்.

மேல், தென் மற்றும் வட மாகாணங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மன்னார், வவுனியா மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் பகல் வேளையில் அதிகரித்த வெப்பநிலையை உணரக்கூடியதாக இருக்கும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 51 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 10

தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமான முறையில் குஷ் ரக போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் புறக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் அவர் தனியார் நிறுவனமொன்றின் நிதி முகாமையாளர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து வருகை தந்த தாய் எயார் ஏசியா விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணிக்கு இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் சந்தேகநபரின் கைப்பையை சோதனையிட்டபோது, அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 512 கிராம் குஷ் ரக போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் மொத்த பெறுமதி சுமார் 51 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

கொழும்பு, மே 10

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்த நபருக்கும் மற்றுமொருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில், சந்தேகநபர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த... இதன்போது, படுகாயமசைம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் குறித்த பகுதியிலிருந்து தப்பியோடியுள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அடையாளம் தெரியாத சடலம் கண்டுபிடிப்பு!

மாத்தறை, மே 10

மாத்தறை - கிரிந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருகொடெல்ல கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் சுமார் 40 வயது மதிக்கத்தக்கவர் எனவும், சுமார் 5 அடி 2 அங்குல உயரம் கொண்டவர் எனவும், பழுப்பு நிறத்திலான ஆடை அணிந்தார் எனவும் பொலிஸார் அடையாளப்படுத்தினர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திஸ்ஸ மஹாராம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் கிரிந்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
10.05.2026 ஞாயிற்றுக்கிழமை

விசுவாவசு வருடம், சித்திரை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# பொருளியல் நிபுணரின் எச்சரிக்கை

முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக 2024 ஜனாதிபதி தேர்தலுக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கும் முன்னதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்து ஒன்றரை வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும், அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியவில்லை.

உடன்படிக்கையில் உள்ள ஒரு நிறுத்தற் குறியைக் கூட மாற்றுவதற்கு நாணய நிதியம் மறுத்துவிட்டது. அதனால், வேறு வழியின்றி அந்த உடன்படிக்கையை முன்னைய அரசாங்கத்தை விடவும் விசுவாசமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடைமுறைப்படுத்துகிறது. அரச வருவாயை அதிகரிப்பதற்காக உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் சிக்கனத் திட்டங்களை அரசாங்கம் மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

அதன் விளைவாக நாட்டு மக்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் சொல்லொணா பொருளாதார இடர்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பனையில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததைப் போன்று பொருளாதார வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீண்டு வந்துகொண்டிருந்த நாடு மத்திய கிழக்கு போரின் விளவாக மேலும் பொருளாதார நெருக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் கேந்திர முக்கியத்துவ ஆய்வுகளுக்கான பிராந்திய நிலையத்தில் இடம்பெற்ற வட்டமேசைக் கலந்துரையாடல் ஒன்றில் சர்வதேச பிரபல்யமிக்க பொருளியல் நிபுணர் கலாநிதி கணேசன் விக்னராஜா இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்து தெரிவித்த எச்சரிக்கையுடனான கருத்துக்கள் பெரும் அச்சத்தை தருகின்றன.

"தற்போது நடைமுறையில் இருந்து வரும் சர்வதேச நாணய நிதியத்துடனான நான்கு வருட பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் அடுத்த வருடம் முடிவுக்கு வரும்போது இலங்கை அதன் நிதித் தேவைகளை சமாளிப்பதற்காக நாணய நிதியத்துடன் மீண்டும் மீண்டும் உடன்படிக்கைகளை செய்துகொள்ள வேண்டியிருக்கும்" என்று கலாநிதி விக்னராஜா கூறியிருக்கிறார்.


2002ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழான 48 மாதகால 300 கோடி அமெரிக்க டொலர்கள் மறுசீரமைப்புத் திட்டத்தின் ஊடாக தற்போது இலங்கை சென்று கொண்டிருக்கிறது. இந்த திட்டம் 2027 மார்ச் மாதத்தில் முடிவடையவிருக்கிறது.

கலாநிதி விக்னராஜா கூறுவதைப் போன்று தொடர்ந்தும் நாணய நிதியத்துடனான பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களை முன்னெடுப்பதாக இருந்தால், தொடர்ந்தும் அந்த நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் அரச வருவாயை அதிகரிப்பதற்கு சிக்கனத் திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். அதனால் தொடர்ந்தும் வாழ்க்கைச் செலவு உயர்ந்து மக்களின் வாழ்க்கைத் தரம் குறையும் ஆபத்து இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்களை பொறுத்தவரை, தற்போது நடைமுறையில் இருந்து வரும் பொருளாதார மறுசீரமைப்பு திட்டம் முடிவுக்கு வந்த பிறகு இன்னொரு மறுசீரமைப்பு திட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடப் போவதில்லை என்ற தோரணையில் கருத்துக்களை தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையின் எதிர்காலம் உலகளாவிய நிலைவரங்களின் போக்குகளில் தங்கியிருக்கும் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டத்தை மீண்டும் நாடாமல் விடுவது என்பது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கப் போவதில்லை. அதனால், பொருளாதார இடர்பாடுகளுக்கு தொடர்ந்தும் முகங் கொடுக்க வேண்டிய துயர்மிகு நிலைவரம் ஒன்றே இலங்கையர்களைக் காத்திருக்கிறது.

# விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி; இலங்கைக்கு ஏற்படப்போகும் தாக்கங்கள்



"வீரர்கள் தேவைப்படும் தேசத்தை நினைத்து பரிதாபப்படுங்கள்" என்று பிரெக்ட் (Brecht) ஒருமுறை கூறினார். சில நாடுகள் அரசியல் அனுபவமற்றவர்களை அதிகாரத்தில் அமர்த்தும் நிலைக்குச் சென்றுள்ளன. அவர்கள் திரைத்துறையில் பெற்ற புகழைக் கொண்டும், "கோயபல்ஸ்" பாணி பொய்களைக் கூறுவதிலும், "மாக்கியவல்லி"த்தனமான வாக்குறுதிகளை வழங்குவதிலும் வல்லவர்களாக இருப்பதாலேயே, அவர்கள் ஒரு மீட்பர் பாத்திரத்தை வகிப்பார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழகத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு மக்கள் பெருமளவில் வாக்களித்துள்ளனர். இருப்பினும், அவரது கட்சியால் தனிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை, இதனால் அவரது அரசியல் பயணம் ஒரு கரடுமுரடான தொடக்கத்தைக் கண்டுள்ளது.

இந்த பிராந்தியத்தில் நடிகர்களாக இருந்து அரசியல்வாதிகளாக மாறிய பலரின் பிரச்சினை என்னவென்றால், அவர்கள் நிஜ உலக அரசியலைத் தங்களின் திரை உலகின் நீட்சியாகவே கருதுகிறார்கள், அதன்படியே செயல்படுகிறார்கள். விதிவிலக்குகள் இருந்தாலும், அவை விதியை உறுதிப்படுத்துவதாகவே உள்ளன.

விஜய்யின் நாடகத்தனமான பிரச்சார முழக்கங்கள் தமிழகத்தோடு மட்டும் முடிந்துவிடுபவை என்றால் நாம் அவற்றைப் புறந்தள்ளியிருக்கலாம். ஆனால், அவை இலங்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

சிக்கலான அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கையாள்வதில் விஜய்க்கு போதிய அனுபவம் இல்லை. படங்களில் இயற்பியல் விதிகளை மீறிச் செய்யப்படும் ஸ்டண்ட்கள் பொழுதுபோக்கிற்கு வேண்டுமானால் உதவலாம், ஆனால் நிஜ உலகின் பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்ள அவை உதவாது.

விஜய் தனது பிரச்சாரத்தில் அளித்த சில முக்கிய வாக்குறுதிகள்,

* பெண் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2,500 ரூபாய் உதவித்தொகை.
* ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள்.
* ஒவ்வொரு பிறந்த குழந்தைக்கும் ஒரு பவுன் தங்க மோதிரம்.
* பள்ளி செல்லும் குழந்தைகளின் தாய்மார்களுக்கு 15,000 ரூபாய் கல்வி உதவித்தொகை.
* வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் 4,000 ரூபாய்.
* புதிய தொழில் தொடங்க 5 லட்சம் முதல் 25 லட்சம் ரூபாய் வரை கடன்.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால், தமிழகத்தின் ஆண்டு வரி வருவாயில் 50 சதவீதத்துக்கும் மேல் செலவாகும் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போகவே அதிக வாய்ப்புள்ளது.

மக்கள் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதில் விஜய்க்கும் அவரது கட்சிக்கும் பெரும் சவால் காத்திருக்கிறது. அவர்களது செல்வாக்கு குறையத் தொடங்கும்போதுதான் இலங்கைக்கு சிக்கல் ஆரம்பமாகும்.

தமிழகத்தின் தோல்வியுற்ற அரசியல்வாதிகளுக்கு இலங்கைதான் எப்போதும் கடைசிப் புகலிடமாக இருக்கிறது. விஜய் ஏற்கனவே கச்சத்தீவை "மீட்போம்" என்று முழங்கியுள்ளார். அவர் தனது முன்னோடிகளையே பின்பற்றுகிறார். மக்கள் கவனத்தைத் திசைதிருப்ப அவர் கச்சத்தீவு விவகாரத்தையும், மீனவர் பிரச்சினையையும் தீவிரமாக முன்னெடுக்க வாய்ப்புள்ளது.

பாரதிய ஜனதா கட்சி தமிழகத்தில் இழந்த செல்வாக்கை மீட்கவும் த.வெ.க.வை வீழ்த்தவும் முயற்சிக்கும். அதே வேளை, கச்சத்தீவு, மாகாண சபை தேர்தல், அதிகாரப் பகிர்வு மற்றும் சட்டவிரோத மீன்பிடி விவகாரங்களில் பா.ஜ.க.வின் நலன்களும் விஜய்யின் நலன்களும் ஒன்றிணைகின்றன.

மறுபுறம், ஜே.வி.பி.யின் இந்தியக் கொள்கை காலப்போக்கில் பெரும் மாற்றமடைந்துள்ளது. முன்னதாக இந்தியாவின் தலையீட்டை ஆதிக்கம் என்று விமர்சித்த ஜே.வி.பி, இன்று இந்தியாவுக்குப் பணிந்துபோகும் நிலையில் உள்ளது. எனவே, பா.ஜ.க.வும த.வெ.க. வும. எழுப்பும் மாகாண சபை தேர்தல் மற்றும் 13-வது திருத்தம் போன்ற கோரிக்கைகளை ஜே.வி.பி தலைமையிலான அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

1980-களின் இறுதியில் ஜே.வி.பி, மற்றொரு "விஜயை" (விஜய குமாரதுங்க) தனது பாதைக்குத் தடையாகக் கருதி அவரைச் சுட்டுக் கொன்றது. அவர் அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபை முறைக்கு ஆதரவாக இருந்ததே அதற்கு காரணம். 38 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜே.வி.பி மீண்டும் ஒரு "விஜயை" எதிர்கொள்கிறது (இந்தியாவில்).

அன்று எதற்காக விஜய குமாரதுங்க கொல்லப்பட்டாரோ, அதே பிரச்சினைகளான 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபை தேர்தலை அமல்படுத்த இன்று இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது.

தமிழகத்தில் விஜய்யின் வெற்றியை இலங்கைக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகப் பார்க்க வேண்டும் எனச் சில ஆய்வாளர்கள் கூறினாலும், இலங்கை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். விஜய்யின் தலைமையில் தமிழகம் ஒரு பகைமைப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடிய சூழலை எதிர்கொள்ள இலங்கை தகுந்த வியூகங்களை வகுக்க வேண்டும்.

**(தி ஐலண்ட், ஆசிரிய தலையங்கம், 8 மே 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வளர வேண்டும் இணைய ஒழுக்கம்!

மதிவதனி

ஒருகாலத்தில் நிலம் மனித வாழ்வின் மையமாக இருந்தது பிறகு தொழில் வந்தது. அதன் பிறகு, உலகத்தை அறிவியல் மாற்றியது. இன்று இணையம் மனித வாழ்வின் வடிவத்தையே மாற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றைய மனிதன் விழித்தவுடன் கைப்பேசியைப் பார்க்கிறான் இணையத்தின் வழியாக பல்வேறு செயல்பாடுகள் நிகழ்கின்றன. இணையம் இன்று ஒரு கருவி அல்ல, வாழ்வின் ஒரு பரப்பு. இந்தப் பரப்பில் மனிதன் எப்படி நடக்க வேண்டும் என்ற கேள்விதான் புதிய சமூக ஒழுக்கத்தின் மையக் கேள்வி.

முன்பு ஒழுக்கம் என்றால் குடும்பத்தில் மூத்தவர்களை மதித்தல், சமூகத்தில் பொறுப்புடன் நடப்பது, உண்மை பேசுதல், பிறருக்கு தீங்கு செய்யாமை போன்றவை. அவை இன்றும் பொருந்துகின்றன. ஆனால், இன்று அதே ஒழுக்கம் இணையத்துக்கும் வந்துவிட்டது. நாம் எழுதும் ஒரு கருத்து மற்றவரைக் காயப்படுத்தலாம். நாம் பகிரும் ஒரு பொய்த் தகவல் 1,000 நபர்களைத் தவறாக வழிநடத்தலாம்.

சுதந்திரம் என்பதைக் கட்டுப்பாடின்றி பேசுவதாய் பலரும் நினைக்கிறார்கள். ஆனால், சமூக ஒழுக்கம் சொல்வது, சுதந்திரத்துடன் பொறுப்பும் சேர வேண்டும் என்பதே. இந்த உண்மை இணையத்தில் இன்னும் முக்கியம். காரணம், நேரில் பேசப்படும் சொல் சிலருக்கே சென்று சேரலாம் ஆனால், இணையத்தில் ஒரு சொல் உலகம் முழுவதும் பரவலாம். அதனால், பேசும் உரிமைக்கு இணையாக பொறுப்புடன் பேசும் கடமையும் வருகிறது. இது புதிய இணைய ஒழுக்கத்தின் முதல் பாடம்.

ஒருவர் சமூக ஊடகத்தில் ஒரு பொய்யான மருத்துவ ஆலோசனையைப் பகிர்கிறார். அதைப் பலரும் நம்புகிறார்கள். சிலர் உண்மையான சிகிச்சையைத் தவிர்க்கிறார்கள். இது வெறும் தகவல் பகிர்வு அல்ல் ஒழுக்கப் பொறுப்பின்மை. அதேபோல தேர்தல் நேரத்தில் போலிச் செய்தி பரவினால் அது ஜனநாயகத்தைப் பாதிக்கிறது. இங்கே தகவல் ஒழுக்கம் அரசியல் ஒழுக்கமாக மாறுகிறது.

இன்றைய இணைய உலகில் உண்மை பேசுவது மட்டும் போதாது, உண்மையைச் சரிபார்த்து பகிர்வதும் ஒழுக்கம். முன்பு "பொய் சொல்லாதே" என்பது ஒழுக்கப் பாடம். இன்று "சரிபார்க்காமல் பகிராதே" என்பதும் அதே அளவுக்கு முக்கியமான ஒழுக்கப் பாடம்.




இன்னொரு முக்கியப் பகுதி தனியுரிமை. முன்பு மனிதனின் தனியுரிமை வீட்டின் சுவர்களால் பாதுகாக்கப்பட்டது. இன்று கைப்பேசிக்குள் மனித வாழ்க்கையின் பெரும்பகுதி இருக்கிறது. குடும்ப உரையாடல்கள், புகைப்படங்கள், வங்கி விவரங்கள், மருத்துவத் தகவல்கள், தனிப்பட்ட சிந்தனைகள் - இவை அனைத்தும் எண்ம வடிவில் இருக்கின்றன. இதனால், தனியுரிமை என்பது இப்போது மனித மரியாதையின் ஒரு பகுதியாகிவிட்டது.

பலர் இலவசமாக செயலிகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், பல நேரங்களில் அவர்கள் பணம் செலுத்தவில்லை என்றாலும், தங்களது தரவை வழங்குகிறார்கள். அவர்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த நிலையைப் பல சிந்தனையாளர்கள் கண்காணிப்பு முதலாளித்துவம் என்று கூறுகின்றனர். அதாவது, மனித நடத்தை வணிகப் பொருளாக மாறுகிறது.

தொழில்நுட்பம் மனிதனுக்குச் சேவையாற்றுகிறதா அல்லது மனிதனைப் பயன்படுத்துகிறதா? இந்தக் கேள்வியே நவீன ஒழுக்கத்தின் இதயம்.

இன்று மனித முடிவுகளை மனிதர்கள் மட்டும் எடுக்கவில்லை. கணித அமைப்புகளும் முடிவு செய்கின்றன. வேலை வாய்ப்பு விண்ணப்பங்களைத் தேர்வு செய்யும் மென்பொருள், வங்கிக் கடன் மதிப்பீடு அமைப்புகள், சமூக ஊடகங்களில் எதை யார் பார்க்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் கணிமுறைகள் (அல்காரிதங்கள்) - இவை அனைத்தும் நம் வாழ்வில் மறைமுக ஆட்சிச் சக்திகளாக செயல்படுகின்றன. இங்குதான் கணிமுறை ஒழுக்கம் முக்கியமாகிறது.

நீங்கள் இணையத்தில் தேடிய ஒரு பொருளை மீண்டும் மீண்டும் விளம்பரமாகப் பார்க்கிறீர்கள். ஏன்? கணிமுறை (அல்காரிதம்) உங்களைப் புரிந்துகொண்டு உங்களிடம் தாக்கம் செலுத்த முயல்கிறது. இதனால், இன்று ஒழுக்கம் மனிதர்களுக்கு மட்டும் அல்ல, தொழில்நுட்பத்திலும் பேசப்படுகிறது.

இணைய உலகம் வளர்ந்த நாடுகளில் ஒரு விதமாகவும் வளர்ந்து வரும் நாடுகளில் வேறுவிதமாகவும் ஒழுக்கக் கேள்விகளை உருவாக்குகிறது. வளர்ந்த நாடுகளில் பெரும்பாலும் தனியுரிமை, தரவு உரிமை, செயற்கை நுண்ணறிவு பொறுப்பு போன்ற கேள்விகள் முக்கியம். ஐரோப்பாவில் மக்கள் தங்கள் தரவு உரிமையைப் பற்றி தீவிரமாக சிந்திக்கிறார்கள். அமெரிக்காவில் சமூக ஊடக நிறுவனங்களின் அதிகாரம் குறித்துக் கேள்விகள் எழுகின்றன.

ஆனால், வளர்ந்து வரும் நாடுகளில் இணைய ஒழுக்கம் வேறு பரிமாணம் பெறுகிறது. இங்கே இணைய அணுகல் சமமில்லை, தகவல் அறிவு சமமில்லை. பலர் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள் ஆனால், அதன் ஆபத்துகளை அறியாமல் இருக்கலாம். இதனால், இணைய ஒழுக்கம் இங்கே கல்வி, சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றுடன் கலக்கிறது.

புதிய சமூக ஒழுக்கம் சொல்வது மிக எளிமையான ஒன்று: திரைக்குப் பின்னாலும் மனிதர் இருக்கிறார் என்பதை மறந்துவிடக் கூடாது. இது சாதாரண வாக்கியம் போலத் தோன்றினாலும் இணைய நாகரிகத்தின் அடிப்படை.

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் இந்த விவாதம் இன்னும் ஆழமாகிறது. இன்று செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) எழுதுகிறது, மொழிபெயர்க்கிறது, ஆலோசனை தருகிறது. நாளை அது முடிவெடுப்பிலும் பங்கு பெறலாம். அப்போது கேள்வி வரும்: மனிதத் தீர்ப்பு எங்கே?

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 01.02.2026 - 07.02.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 27
நல்ல நேரம்: 7.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று மந்தமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் நிறைந்ததாக இருக்கும், சில இடங்களில் வேலை அழுத்தம் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்களை எதிர்பார்க்கலாம், அதே நேரத்தில் வேலை மாற்றம் சம்பள உயர்வு பற்றிய பேச்சு ஏற்படலாம். வியாபாரத்தில் நிதானமான முன்னேற்றம் உண்டாகும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடும் நேரம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும். சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிக்கல்களை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு செயல் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் வருமானம் சற்று மந்தமாக இருக்கும். புதிய முதலீடுகளில் கவனமாக இறங்க வேண்டும். குடும்பத்தில் இருந்து வந்த முரண்பாடுகள் விலகும், பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும் , சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் இலகுவான நிலை இருக்கும், சில இடங்களில் இணக்கம் நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய வாய்ப்புகள் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த காரியம் உடனே நிறைவேறும். வியாபாரத்தில் வெற்றி கிடைத்து பணவரவு அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகளில் தைரியமாக இறங்கலாம். சந்தோசம் அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும், பெருமையும் சிறப்பு கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். சந்தோசம் அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகமாக இருக்கும், புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த மனக்கசப்பு நீங்கும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நடந்து மன மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வங்கி இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும், குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி குதூகலம் அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டமாக இருக்கும், சில இடங்களில் சவால் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும், பிள்ளைகளால் எந்த தொந்தரவும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரை நூற்றாண்டு கடந்தும் கூட ஆட்சி மாற்றத்துக்கு சினிமா பிம்பம் தேவைப்படுகிறதே ...!

## விஜய்யின் வெற்றி தமிழ்நாட்டு அரசியலில் ஏற்படுத்திய அடிப்படை மாற்றம் என்ன?



வீரகத்தி தனபாலசிங்கம்

தமிழ்நாட்டு அரசியலில் சுமார் அரை நூற்றாண்டு காலமாக திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளான திராவிட முன்னேற்ற கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகமும் கொண்டிருந்த ஆதிக்கத்துக்கு இடையூறு செய்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய மூன்றாவது பெரிய அரசியல் சக்தியாக தமிழக வெற்றிக் கழகத்தை ஒரு குறுகிய இரு வருடங்களுக்குள் மேலெழ வைத்திருப்பதே நடிகர் சந்திரசேகர் ஜோசப் விஜய் செய்திருக்கும் மிகப் பெரிய சாதனை.

நடிகர்கள் பலர் ஏற்கெனவே அரசியல் கட்சிகளை தொடங்கிய போதிலும், அவர்களில் எவரினாலுமே திராவிட இயக்க கட்சிகளின் ஆதிக்கத்துக்கு சவாலை ஏற்படுத்த முடியவில்லை. நாளடைவில் அவர்கள். அதே திராவிட கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து மாத்திரமே பாராளுமன்றத்தில் அல்லது மாநில சட்டசபையில். ஆசனங்களைப் பெறவேண்டியிருந்தது.

இதுவரை காங்கிரஸ் கட்சியும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் திருமாவளவனின் விடுதலை சிறுத்தைகள் போன்ற கட்சிகளுக்கு ஏதாவது ஒரு திராவிட இயக்கக் கட்சியுடன் தேர்தல் கூட்டணிகளை ஏற்படுத்திக்கொள்ளவதற்கான தெரிவு மாத்திரமே இருந்தது. தற்போது மூன்றாவது பெரிய சக்தியாக மாத்திரமல்ல, ஆளும் கட்சியாகவும் தமிழக வெற்றிக் கழகம் வந்திருப்பதையடுத்து மாநிலத்தின் கூட்டணி அரசியல் சமநிலையும் மாறப் போகிறது. காங்கிரஸ் உட்பட தி.மு.க. வுடன் நீண்ட காலமாக கூட்டுச் சேர்ந்திருந்த கட்சிகள் விஜய் அரசாங்கத்தை அமைப்பதற்கு வழங்கும் ஆதரவு இதையே தெளிவாகக் காட்டுகிறது.

சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் (118) பெறமுடியாமல் போனதைத் தவிர, மற்றும்படி தமிழ்நாட்டில் முதலமைச்சராக வந்த முதல் சினிமா நடிகர் என்ற பெருமைக்குரியவராக விளங்கிய எம்.ஜி. இராமச்சந்திரன் தேர்தல் அரசியலில் செய்திராத சில சாதனைகளை விஜய் செய்து காட்டியிருக்கிறார். அந்த மாநிலத்தில் நடிகர்கள் அரசியலில் பிரவேசித்த வேளைகளில் எம்.ஜி.ஆராகிவிட முடியாது என்று கூறப்படுவது ஒரு வழமையாக இருந்தது. தற்போது எம்.ஜி.ஆரையும் விஞ்சிய ஒரு அளவுகோலாக விஜய் வந்துவிட்டார் எனலாம்.

தி.மு.க. வில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் அண்ணா தி.மு.க.வை ஆரம்பித்த எம். ஜி. ஆர். ஐந்து வருடங்களுக்கு பின்னர் முதன்முதலாக 1977 சட்டசபை தேர்தலில் இரு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு 33.5 சதவீத வாக்குகளைப் பெற்றார். ஆனால், விஜய் தனது சொந்தக் கட்சியை தொடங்கி இரு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னதாக வே எந்த கட்சியுடனும் கூட்டுச் சேராமல் தனியாகப் போட்டியிட்டு 35 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

2026 சட்டசபை தேர்தல் சி.என். அண்ணாத்துரை தலைமையில் தி.மு.க. தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த 1967 தேர்தலையும் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வை எம்.ஜி. ஆரின் கட்சி ஆட்சியில் இருந்து அகற்றிய 1977 தேர்தலையும் போன்று மாநில அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று விஜய் கூறியபோது பலரும் அதை பெரிதாக கணக்கில் எடுக்கவில்லை.

அண்ணாவின் தலைமையில் தி.மு.க. 1967 தேர்தலில் ஐந்து கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு 40.6 சதவீத வாக்குகளைப் பெற்று 144 ஆசனங்களைக் கைப்பற்றியது. 1977 தேர்தலில் அண்ணா தி.மு.க. 137 ஆசனங்களை வென்றெடுத்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சினிமா உலகில் இருந்து முதலமைச்சர் கதிரைக்கான விஜய்யின் எழுச்சி முன்னென்றும் இல்லாத வகையிலானதாகும்.

ஆட்சியைக் கைப்பற்றிய வேகத்தைப் பொறுத்தவரை, எம்.ஜி.ஆருடன் அல்ல, முன்னாள் ஆந்திர பிரதேச முதலமைச்சரான நடிகர் என்.ரி. ராமராவுடன் விஜய்யை ஒப்பிடுவதே பெருமளவுக்கு பொருத்தமானது. 1982 ஆம் ஆண்டில் தெலுங்கு தேசம் கட்சியை தொடங்கிய எட்டு மாதங்களில் ராமராவ் ஆட்சிக்கு வந்தார்.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடர்ந்து தோன்றிய தமிழ் உணர்ச்சிமயப்பட்ட அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் 1967 தேர்தலில் தி.மு.க.வின் பின்னால் மாணவர்கள் அணி திரண்டார்கள். ஆனால், அத்தகைய எந்தவிதமான போராட்டப் பின்புல உணர்வுமே இல்லாமல் விஜய்யின் பின்னால் அணி திரண்ட இளைய தலைமுறையினரும் பெண்களும் 60 வருடங்களாக மாறிமாறி ஆட்சிசெய்துவந்த திராவிட இயக்க கட்சிகளைத் தோற்கடிப்பதற்கு விஜய்க்கு உதவியிருக்கிறார்கள்.

தி.மு க.வுக்கும் அண்ணாத்துரைக்கும் அன்று உதய சூரியன் சின்னம் உதவியதைப் போன்று விஜய்க்கு தற்போது விசில் சின்னம் கைகொடுத்திருக்கிறது. தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்களைக் கூட சரியாகத் தெரியாமலே மக்கள் விசில் சின்னத்துக்கு பெருமளவில் வாக்களித்திருக்கிறார்கள். தேர்தல் பிரசாரங்களுக்காக விஜய்யினால் மாநிலத்தின் பல பாகங்களுக்கு செல்ல முடியவில்லை. சகல 234 தொகுதிகளிலும் தானே வேட்பாளர் என்று நினைத்து விசில் சின்னத்துக்கு வாக்குமாறு மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு அரசியல் கட்சியினதும் குறிப்பாக, தி.மு.க.வினதும் அண்ணா தி.மு.க.வினதும் வாக்கு வங்கியை விஜய் தகர்த்திருக்கிறார். சென்னை பிராந்தியத்தில் அவரது கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. எம். ஜி. ஆரினால். கூட முதல் தேர்தலில் சென்னையில் தி.மு.க.வின் ஆதிக்கத்தை தகர்க்க முடியவில்லை. தி.மு.க.வின் கோட்டைக்குள் இருபது வருடங்களுக்கு பின்னர் மாத்திரமே ஜெயலலிதாவின் தலைமையில் அண்ணா தி.மு. க.வினால் ஊடுருவக் கூடியதாக இருந்தது.



2006 தேர்தலில் சென்னையில் 14 சட்டசபை ஆசனங்களில் 7 ஆசனங்களையும் 2011 தேர்தலில் 16 ஆசனங்களில் 14 ஆசனங்களையும் அண்ணா தி.மு.க. கைப்பற்றியது. இந்த தடவை விஜய்யின் கட்சி சென்னையில் 14 ஆசனைங்களைக் கைப்பற்றியிருக்கிறது. தி.மு.க.வின் தலைவரும் பதவிவிலகும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் கூட சென்னையில் தனது தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளரிடம் தோல்வி கண்டார்.

எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்வும் சினிமா வாழ்வும் சமாந்தரமானவை என்றும் ஆரம்பத்தில் இருந்தே தன்னைச் சுற்றி ஒரு "மக்கள் நாயகன்" பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவர் இரண்டு துறைகளையும் பயன்படுத்திவந்தார் என்றும் சுட்டிக் காட்டியவர்கள் விஜய்யை திடீர் அரசியல் ஆசையில் கட்சியைத் தொடங்கியவராக காண்பித்தார்கள்.

2026 சட்டசபை தேர்தலை எதிர்கொள்ளும் முடிவோடு இரு வருடங்களுக்கு முன்னர் விஜய் கட்சியை தொடங்கியபோது, பல தசாப்தகால அடிமட்டக் கட்டமைப்புக்களைக் கொண்ட இரு பிரதான திராவிட இயக்கக் கட்சிகளையும் தோற்கடிப்பது இயலாத காரியம் என்ற அபிப்பிராயமே பரவலாக மேலோங்கியிருந்தது. ஆனால், அவர் தனக்கு ஒரு மக்கள் ஆதரவுத் தளத்தை கட்டியெழுப்பும் பணிகளை பல வருடங்களாக தனது இரசிகர் மன்றங்களின் ஊடாகச் செய்து வந்திருக்கிறார்.

அரசியலில் பிரவேசிக்கும் நோக்கம் விஜய்க்கு திடீரென்று ஏற்பட்டது என்று கூறிவிட முடியாது. 2009 ஆம் ஆண்டிலேயே தனது இரசிகர் மன்ற வலைப்பின்னலை 'விஜய் மக்கள் இயக்கமாக' மாற்றி அதன் மூலமாக படிப்பு மையங்கள், நூலகங்கள் மற்றும் கணினி மையங்களை அமைத்து சமூக சேவைகளைத் தொடங்கியிருந்தார். அந்த இயக்கம் வெள்ள நிவாரணப் பணிகள், மருத்துவ முகாம்கள் மற்றும் இரத்ததான முகாம்களையும் நடத்தியது.

அதேவேளை, ஒரு முன்னணி நடிகராக தடம்பதித்த பிறகு அவர் ஒவ்வொரு நேர்காணலிலும் 'சரியான நேரத்தில் அரசியலுக்கு வருவேன்' என்று கவனமாக கூறிவந்தார். சமூகத்தில் அடிமட்டப் பணிகளுக்கு அப்பால் 2009 ஆம் ஆண்டில் அவர் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியுடன் நடத்திய சந்திப்பும் அண்ணா ஹசாரேயின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்துக்கு தெரிவித்த ஆதரவும் அவரது அரசியல் ஆர்வத்தை வெளிப்படுத்தின.

அதனால் அன்றைய ஆளும் கட்சியான தி.மு.க. அதிருப்திக்கு உள்ளாகியதாகவும் விஜய்யின் படங்களுக்கு பல சிக்கல்களை உருவாக்கியதாகவும் கூறப்பட்டது. 2011 சட்டசபை தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு க. வை ஆதரிக்கத் தீர்மானித்ததன் மூலம் விஜய் மக்கள் இயக்கம் அதன் தேர்தல் நிலைப்பாட்டை முதன் முதலாக வெளிப்படுத்தியது.

ஆனால், 2013 ஆம் ஆண்டில் வெளியான 'தலைவா' என்ற திரைப்படத்தில் வந்த 'தலைமையேற்க இதுவே நேரம்' என்ற வசனம் ஜெயலலிதா அரசாங்கத்துடன் விஜய்க்கு சிக்கலை ஏற்படுத்தியது. அதற்கு பின்னரான வருடங்களில் முக்கியமான சமூகப் பிரச்சினைகளில் அவர் கவனத்தைச் செலுத்தினார். மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை பரீட்சித்துப் பார்ப்பதற்காக விஜய் மக்கள் இயக்கம் 2021 உள்ளாட்சி தேர்தல்களில் 169 இடங்களில் போட்டியிட்டு 100க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்றது மாநில அரசியல் அரங்கில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

ஆழமான அடிமட்டக் கட்சி அமைப்புக்கள் அல்லது பாரம்பரிய ஊடகங்கள் வாயிலாகத் தொடர்ச்சியான செயற்பாடுகள், மாபெரும் மகாநாடுகள் மற்றும் பிரமாண்டமான தேர்தல் செலவுகள் இல்லாமலேயே, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தேர்தல் வெற்றியைப் பெறமுடியும் என்பதை விஜய் கையாண்ட பிரசாரத் தந்திரோபாயம் நிரூபித்திருக்கிறது. அவரது அணுகுமுறை குறிப்பாக, இளைஞர்களுடனும் டிஜிட்டல் தளங்களில் இயங்கும் வாக்காளர்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் மாற்று வழிமுறைகளின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தை வெளிக்காட்டியிருக்கிறது.

சினிமா மூலமாக தான் கவர்ந்திழுத்த சிறுவர்களிடம் தனது கட்சிக்கு கட்டாயம் வாக்களிக்க வேண்டும் பெற்றோர்களை வற்புறுத்துமாறு விஜய் விடுத்த வேண்டுகோளும் கணிசமானளவுக்கு பயன் தந்திருப்பதாக கூறப்படுகிறது. "விருப்பமான விளையாட்டுப் பொருட்களை வாங்கித்தருமாறு உங்கள் பெற்றோரிடம் அடம்பிடிப்பதைப் போன்று விஜய் மாமாவின் கட்சியின் விசில் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அவர்களிடம் கெஞ்சிக் கேளுங்கள்" என்று சமூக வலைத்தளங்கள் மூலமாக விஜய் தமிழ்நாட்டுச் சிறுவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

திராவிட இயக்க கட்சிகளும் நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலமாக ஓரளவுக்கு பிரசாரங்களை முன்னெடுத்த போதிலும், பெருமளவுக்கு அவை அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட பேச்சுத் திறமையை அடிப்படையாகக் கொண்ட பழைய அரசியல் பாணியிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கின்றன. உணர்ச்சிவசமான வேண்டுகோள்களை மையமாகக் கொண்ட இந்த அணுகுமுறை சமூக ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற இன்றைய சூழலில் பெரியளவில் எடுபடுவதற்கு வாய்ப்பில்லை.

விஜய்யின் வெற்றி தமிழ்நாட்டின் இரு முனை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது எனலாம். மும்முனைப் போட்டியை நோக்கிய மாற்றம் சிறிய கட்சிகள் அவற்றின் வாக்கு வங்கிக்கு விகிதப் பொருத்தமில்லாத வகையில் செல்வாக்கைச் செலுத்துவதற்கான களத்தை உருவாக்குகிறது என்பதுடன் ஒட்டுமொத்த அரசியல் சமன்பாடுகளையும் மாறியமைக்கக்கூடும். இரு ஆசனங்களை பெற்ற கட்சிகள் கூட விஜய் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதற்கு நிபந்தனைகளை விதித்து காலத்தை தாமதிக்கின்ற இன்றையை சூழ்நிலை இதை தெளிவாக உணர்த்துகிறது.

தோல்வி கண்டிருக்கும் பிரதான திராவிட கட்சிகள் ஊழல்மயப்பட்டவையாகவும் மக்கள் ஆதரவை கணிசமானளவுக்கு இழந்து வருகின்றவையாகவும் இருக்கின்ற போதிலும், இந்த தேர்தல் முடிவுகள் தமிழ்நாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கும் திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு பாரிய பின்னடைவை அண்மைய எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்று கூறிவிடமுடியாது.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான சமூகநீதி மற்றும் மாநில சுயாட்சியை விஜய்யும் தேர்தல் பிரசாரங்களில் முன்னிலைப்படுத்தினார். அவரிடம்
(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிரிக்கெட்டும் தேசிய நலனும்!



கலாநிதி
ஜெகான்பெரேரா

சிறிலங்கா கிரிக்கெட் மறுசீரமைப்புக் குழுவின் தலைவராக முன்னாள் அமைச்சர் எரான் விக்ரமரத்ன நியமிக்கப்பட்டிருப்பது கிரிக்கெட்டின் எதிர்காலத்திற்கு மட்டுமன்றி அதற்கு அப்பாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது தோல்விப் பாதையில் தத்தளிக்கும் இலங்கை கிரிக்கெட்டிற்கு ஒரு மீட்சிக்கான வாய்ப்பை வழங்குவதுடன், நாட்டின் ஆட்சிமுறைக் கலாசாரத்தில் ஏற்படக்கூடிய ஒரு மாற்றத்தையும் அடையாளப்படுத்தி நிற்கிறது.

1996 உலகக் கிண்ண கிரிக்கெட் வெற்றிக்குப் பிறகு தேசிய அணி சில பொற்காலங்களைக் கண்டிருந்தாலும், கடந்த தசாப்தத்தில் அத்தகைய வெற்றிகள் அரிதாகிப் போயின. இந்த வீழ்ச்சிக்கு பின்னால் இருப்பது சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தின் தோல்விகளாகும். இவை நாட்டின் பொதுவான ஆட்சிமுறைத் தோல்விகளைப் போன்றே அமைந்திருக்கின்றன. எனவே, சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்ட ஒரு புதிய குழுவின் நியமனம், பொது நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பும் சவாலை பிரதிபலிக்கிறது.

எரான் விக்ரமரத்னவின் நியமனம், நிரூபிக்கப்பட்ட அனுபவமுள்ள ஒரு தொழில்முறை நிர்வாகியை கிரிக்கெட் களத்திற்குள் கொண்டு வந்துள்ளது. அவருக்கு முன்னர் இருந்த பலரிடம் இல்லாத சில ஆற்றல்கள் அவரிடம் உள்ளன. தற்போதைய அரசாங்கத் தலைவர்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரே, ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாத ஒரு சில அமைச்சர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார். நிதித்துறை சார்ந்த நிபுணத்துவமும் நேர்மையும் கொண்டவராக அவர் நீண்டகாலமாக மதிக்கப்படுகிறார்.


இக்குழுவில் குமார் சங்கக்கார, ரொஷான் மகானாம, சிதத் வெத்திமுனி போன்ற புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர்களும், சட்ட மற்றும் வணிகத் துறை நிபுணர்களும் இடம்பெற்றுள்ளனர். கிரிக்கெட் நிர்வாகத்தில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை அறிமுகப்படுத்துவதும், வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்துவதுமே இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணியாகும்.

இந்த நியமனம் முக்கியமானதாகக் கருதப்படுவதற்கான இரண்டாவது காரணம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையில் உதவி பெறுவதற்காக எதிர்க்கட்சியுடன் தொடர்புடைய ஒருவரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அணுகியிருப்பது இதுவே முதல் முறையாக இருக்கலாம். அரசியல் சார்பற்ற சிவில் சமூகக் குழுக்களும் அரசியல் ஆய்வாளர்களும் நீண்டகாலமாக வலியுறுத்தி வரும் இருதரப்பு ஒத்துழைப்பிற்கு இது ஒரு சான்றாகும்.

அரசாங்கத்தின் நியமனங்கள் கட்சி விசுவாசிகளுக்கு மட்டுமே வழங்கப்படாமல், திறமையின் அடிப்படையில் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இதுவரை தனது கட்சி சார்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளித்து வந்த அரசாங்கத்தின் போக்கில், இந்த நியமனம் ஒரு முக்கியமான மாற்றத்தைக் காட்டுகிறது.

**தேசிய நலன்**

மக்களால் பெரிதும் நேசிக்கப்படும் கிரிக்கெட் போன்ற பொது வாழ்வின் சில பகுதிகள், கட்சிப் பிரிவினைகளைக் கடந்து தேசிய நலனை முதன்மைப்படுத்த வேண்டும். நிறுவனங்கள் நெருக்கடியில் இருக்கும்போது ஒவ்வொரு நிறுவனத்தையும் அரசியல் போட்டித் தளமாக இலங்கை தொடர்ந்து பயன்படுத்த முடியாது. அரசாங்கம் தன்னிடம் இல்லாத



**இலங்கை கிரிக்கெட் என்பது தேசிய உணர்வின் ஒரு அங்கமாகும். அது ஒரு காலத்தில் நாட்டை ஒன்றிணைத்து, சர்வதேச அளவில் இலங்கையர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தது. எனவே, கிரிக்கெட் நிர்வாகத்தில் நேர்மையையும் நிபுணத்துவத்தையும் மீட்டெடுப்பது, நாட்டின் மறுமலர்ச்சிக்கான ஒரு பெரிய பணியின் அங்கமாக அமையும்.**

நிபுணத்துவத்தை வெளியில் இருந்து தேட முன்வந்தபோது, எதிர்க்கட்சியின் ஒரு பகுதியினர் அதற்கு எதிர்மறையான எதிர்வினையை ஆற்றியிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

தேசிய நலன் சார்ந்த விடயங்களில் கூட இருதரப்பு ஒத்துழைப்பு கலாசாரம் இல்லாமையை இது காட்டுகிறது. எரான் விக்ரமரத்ன உறுப்பினராக இருந்த சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சி, அரசியல்வாதிகள் விளையாட்டு நிர்வாகத்தில் இருக்கக் கூடாது என்று கூறி அவரை கட்சியிலிருந்து விலகுமாறு கோரியுள்ளது. அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஒரு நிறுவனத்தைச் சீரமைக்க அனுபவம் வாய்ந்த நிர்வாகிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கும் இடையிலான வேறுபாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

மிகவும் கவலையளிக்கும் விடயம் என்னவென்றால், புதிய கிரிக்கெட் குழுவிற்கும் அதன் தலைவருக்கும் எதிராக மத ரீதியான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவதுதான். இலங்கை ஒரு பல்லின, பன்மத சமூகம் என்ற யதார்த்தத்தை நிராகரிக்கும் இத்தகைய செயல்களை அறவே ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த இடைக்காலக் குழு அந்த பன்முகத்தன்மையை ஓரளவிற்கு பிரதிபலிக்கிறது. குறுகிய அரசியல் இலாபத்திற்காக இனவாதத்தைத் தூண்டுவது எவ்வளவு ஆபத்தானது என்பதை நீண்டகால இன மோதல்கள் நமக்குக் கற்பித்திருக்க வேண்டும். இத்தகைய பிரிவினைகளால் இலங்கை ஏற்கனவே பெரும் விலையைக் கொடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி, அனைத்து குடிமக்களின் சம உரிமைகளையும் பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளது.

வியட்நாமின் வணக்கத்திற்குரிய பிக்குதிச் பன்னாகார தலைமையில் இலங்கையில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச அமைதிப் பேரணி, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அன்பு மற்றும் விழிப்புணர்வு பற்றிய அந்த செய்தி, கிரிக்கெட் நியமனங்களை அரசாங்கத்தைத் தாக்குவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்துபவர்களின் வெறுப்புணர்விற்கு முற்றிலும் மாறுபட்டது.

கிரிக்கெட் குழுவின் முன்னால் உள்ள சவால்கள், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் பன்முகத்தன்மையை மதித்தல் போன்ற அரசாங்கத்தின் பெரிய சவால்களுக்கு இணையாக உள்ளன.

சிதைந்துள்ள அமைப்புகளைச் சீரமைக்க நேரமும் முயற்சியும் தேவைப்படும். இது ஒரே இரவில் நடந்துவிடாது.

**புதிய அங்கீகாரம்**

யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எரான் விக்ரமரத்னவின் நியமனம் மட்டுமே வெற்றியை உறுதி செய்துவிடாது. சீர்குலைந்த நிறுவனங்களைச் சீர்திருத்துவது எப்போதுமே கடினம். அத்துடன், மற்ற கிரிக்கெட் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை சிறிய மக்கள் தொகையைக் கொண்ட சிறியதொரு நாடாகும். 2022 பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இன்னும் மீண்டு வரும் நிலையில், 'டிட்வா' சூறாவளியின் பாதிப்புக்களையும் சர்வதேச பொருளாதார நெருக்கடிகளையும் நாடு எதிர்கொள்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் கிரிக்கெட், பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டிற்கும் செலவிட இலங்கையிடம் போதிய வளங்கள் இல்லை.

வளங்கள் குறைவாக இருக்கும்போது, அவை ஊழல் அல்லது திறமையின்மையால் வீணடிக்கப்படக் கூடாது. கட்சி அல்லது மத அடையாளங்களுக்கு அப்பாற்பட்டு திறமையானவர்களைப் பயன்படுத்துவது அவசியமானது. நாட்டின் மீட்சிக்கான பொறுப்பு அரசாங்கத்திடம் மட்டும் இருக்க முடியாது. இது ஒட்டுமொத்த சமூகமும் இணைந்து செய்ய வேண்டிய பணியாகும். அரசியல் ரீதியாக நடுநிலையான மற்றும் தேசிய நலன் சார்ந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு.

இலங்கை கிரிக்கெட் என்பது தேசிய உணர்வின் ஒரு அங்கமாகும். அது ஒரு காலத்தில் நாட்டை ஒன்றிணைத்து, சர்வதேச அளவில் இலங்கையர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தது. எனவே, கிரிக்கெட் நிர்வாகத்தில் நேர்மையையும் நிபுணத்துவத்தையும் மீட்டெடுப்பது, நாட்டின் மறுமலர்ச்சிக்கான ஒரு பெரிய பணியின் அங்கமாக அமையும்.

இந்த நியமனங்கள், நாட்டின் அரசியல் தலைமையும் மக்கள் ஆட்சி முறையும் முதிர்ச்சியடையத் தொடங்கியிருப்பதன் அறிகுறியாகும்.

திறமை, நேர்மை மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பின் அவசியத்தை அங்கீகரிப்பதன் மூலம், இலங்கை நிலையான மற்றும் வெற்றிகரமான ஆட்சி முறையை நோக்கி நகர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை!

# விஜய் ஊடாக தமிழரசு உணரவேண்டியது!!

பனங்காட்டான்

‘காலம் என்னைக் கொண்டு சென்று ஓரிடத்தில் அமர வைக்கும். அதற்கான நேரம், சூழல், இடம் அனைத்தும் அமைந்து வரவேண்டும். அது வரும்போது நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். அந்தச் சமயத்தில் நான் வருவேன்’.

இது, இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராகியிருக்கும் ஜோசப் விஜய் சந்திரசேகர் எனும் நடிகர் விஜய் பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் கூறியது. 2011ம் ஆண்டு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூறியதை அப்போது எவரும் பெரிதுபடுத்தவில்லை. ஆனால், அதுவே இப்போது நிதர்சனமாகியுள்ளது.

தனது பட்டாபிசேகத்துக்காக பதினான்கு ஆண்டுகள் தமது மனைவி சீதையுடன் காடேகிய இராமரை தெய்வமாகக் கொண்டாடும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி புரியும் இந்தியாவில், தமிழர்கள் திரட்சியாக வாழும் தமிழ்நாட்டில் திராவிட ஆட்சிக்கு ஓய்வு கொடுத்து தமிழர் ஒருவரின் தலைமையில் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது.

‘காலம் வரும்போது நான் வருவேன்’ என்று முற்கூட்டியே முன்மொழிந்த விஜய் தமிழக வெற்றிக் கழகத்தை உருவாக்கி மூன்று ஆண்டுகள்கூட ஆகவில்லை. மக்களின் நம்பிக்கை நாயகனாக தேர்தல் மூலம் 108 ஆசனங்களை முதல் தேர்தலிலேயே பெற முடிந்தது என்பது ஒரு தனி வரலாறாக சரித்திரம் எழுத ஆரம்பித்துள்ளது.

அடிப்படையில் இவரும் ஓர் சினிமா நடிகர்தான். இதுவே அவரது தொழிலாகவும், வருமானமாகவும் இருந்தது. அரசியல் வாரிசாக இவர் அறிமுகமாகவில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலேயே அறுபது ஆண்டுகளை அண்மித்த திராவிட ஆட்சிகளுக்கு மக்களூடாகத் தீர்ப்பளித்த ஒரு விடிவெள்ளியாக மலர்ந்திருக்கிறார்.

தனித்து ஆட்சியமைக்க எந்தக் கட்சிக்கும் 118 பிரதிநிதிகள் வேண்டும். 108 மட்டுமே இவருக்குக் கிடைத்தது. இதனைக் குறியாக வைத்து இவரை ஆட்சிக் கதிரையில் ஏறாமல் தடுக்க பல வழிகளாலும் பல கட்சிகளும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். மோடியின் பாரதிய ஜனதா கட்சி ஏஜன்டாக இருக்கும் தமிழக ஆளுனர் அர்லேகர் ஏற்க முடியாத நிபந்தனைகளை விதித்தார். விஜய்யின் வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாத கட்சிகள்கூட ஆளுனரின் முடிவை வன்மையாகக் கண்டித்தன.

திராவிட முன்னேற்ற கழகக் கூட்டணியில் ஐந்து இடங்களில் வெற்றி பெற்ற இந்திய காங்கிரஸ் விஜய் அணிக்கு வழங்கிய ஆதரவை ஜீரணிக்க முடியாத மோடியின் பாரதிய ஜனதா கட்சி இயலுமான வரை விஜய் முதலமைச்சராவதை தடுக்கவே முனைந்தது. எனினும், நான்காம் திகதிக்கும் எட்டாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளால் விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யுனிஸ்ட், மார்க்சிய கம்யுனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றின் ஆதரவு கிடைத்ததால் விஜய்யின் ஆதரவு 118ஐ தாண்டியது.

ஜனநாயக மரபுப்படி கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சிக்கு அனுமதி அளிக்க வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமது தொகுதியில் தோல்வி கண்டவருமான ஸ்ராலின் கூறினாராயினும், தங்கள் கூட்டணியிலிருந்து காங்கிரஸ் பாய்ந்து தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவு வழங்கியதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காங்கிரஸ் இன்னமும் தனது பழைய குணத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்று ஸ்ராலின் கூறிய கருத்து அவரது ஆற்றாமையின் வெளிப்பாடாக அமைந்தது எனலாம்.

இன்னொரு கருத்துக் கூறலையும் இங்கு கவனிக்க வேண்டும். புதிய ஆட்சி யின் முதல் ஆறு மாதங்களை மிக உன்னிப்பாக நாங்கள் கவனிப்போம். அதன் பின்னரே எந்த முடிவையும் தாங்கள் எடுக்க நேரிடலாம் என்றும் ஸ்ராலின் கூறியுள்ளார். தி.மு.க. கூட்டணியில் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க்ஸிச கம்யுனிஸ்ட் கட்சியின் சண்முகம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்தும் சூட்சுமமான ஒரு



தமிழகத்தில் எழுபத்தாறு ஆண்டுகால திராவிட மாயையை ஒதுக்குவதற்கு, பதினாறு ஆண்டுகளுக்கு முன்னரே ‘நான் வருவேன்” என்று கூறிய 51 வயதான ஒரு சினிமாக்காரன் தமது கனவை நனவாக்கி மக்கள் பீடத்தில் ஏறியுள்ளான். விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியபோது நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியை வழங்கியதன் ஊடாக 76 ஆண்டுகால அரசியல் தோல்வியை மூடி மறைத்துக் கொண்டு, எவ்வளவு காலந்தான் தமிழ்த் தேசியத்துக்கு தமிழரசுக் கட்சியால் தலைமை தாங்க முடியும்?

விடயத்தை சுட்டுவதுபோலவே தெரிகிறது. எந்த நிபந்தனையும் இன்றி, எந்த ஒரு பதவியும் ஏற்காது வெளியிலிருந்தவாறு தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவை வழங்க தங்கள் கட்சி முன்வந்துள்ளதாக தெரிவித்துள்ள இவர் தங்கள் உறவு தி.மு.க.வுடன் தொடர்பு தொடரும் என்றும் கூறியுள்ளார்.

மேற்கு நாடுகளில் (இன்று எல்லா நாடுகளிலும்) திருமணமாகாது இருவர் கூடி வாழ்வதும், வேண்டுமானால் பிரிந்து செல்வதையும் ஒத்ததாக இவரது கருத்து அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. தமிழர் வெற்றி கழகத்தின் ஆட்சிக்கு முதல் ஆறு மாதங்களுக்கு எந்தத் தொந்தரவையும் கொடுக்காது என தி.மு.க தலைவர் ஸ்ராலின் கூறியிருப்பதற்கும், விஜய்யின் ஆட்சிக்கு வெளியிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் - ஆனால் தி.மு.க.வுடனான உறவு தொடருமென மார்க்ஸிச கம்யுனிஸ்ட் செயலாளர் சண்முகம் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதற்கும் இடையில் ஏதோ ஒன்று தொக்கி நிற்பதை உணர முடிகிறது.

தமிழக அரசியல் விமர்சகர் ஒருவர் கூறியதுபோன்று தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வில் உள்ள அதிருப்தியாளர்களை அடுத்த ஆறு மாதத்துக்குள் எவ்வாறு கையாளலாம் என்பதில் விஜய் அடையும் வெற்றியே அவரது தேர்தல் வெற்றியை முழுமையாக்கலாம்.

1949ம் ஆண்டு உருவான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சித் தொடரை, திராவிடம் என்ற மாயையுள் சிக்கியிருந்த தமிழகத்தை 51 வயதான ஒருவர் புதிய கட்சி ஆரம்பித்து முதல் மூன்று வருடங்களுக்குள் முதலாவது தேர்தலை சந்தித்து மக்கள் மனதில் அமர்ந்து ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது அரசியலில் மகத்தான சாதனை என்றே சொல்ல வேண்டும்.

விஜய்யின் வெற்றிக்கு இலங்கையிலிருந்து வாழ்த்துகள் பறக்கின்றன. தெற்கிலிருந்து நாமல் ராஜபக்ச உட்பட மலையக மக்களின் பிரதிநிதிகள், இஸ்லாமிய கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவிக்கின்றனர். தமிழ்த் தேசிய தரப்பில் தமிழரசு கட்சியும், தமிழ் காங்கிரசும் சில எதிர்பார்ப்புகளை கோரிக்கைகளாக வைத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளன. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வழக்கம்போல தடுமாறிக் கொண்டிருப்பது போல தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் வாழ்த்துகள் அதன் உட்கட்சி முரண்பாட்டை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டுகிறது. கட்சியின் தலைவராகத் தெரிவானவரும், நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்தவருமான சிவஞானம் சிறீதரன், கட்சியின் தற்போதைய நாடாளுமன்றக் குழுத்தலைவரான இராசமாணிக்கம் சாணக்கிய, கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தனித்தனியாக வாழ்த்துகளை அனுப்பி கட்சியின் ஒழுங்கற்ற அலங்கோல நிலையை கடல் கடந்தும் தெரிய வைத்துள்ளனர். வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளும் தீர்மானங்களை நிறைவேற்றி தமிழக புதிய முதல்வருக்கு வாழ்த்துகளை தெரிவிக்கக்கூடும்.

தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவொன்று நேரடியாக தமிழகத்துக்குச் சென்று தங்கள் வாழ்த்தை தெரிவிக்க முயற்சிக்கலாம். அதற்கு முன்னர் எவரும் எதிர்பாராத விதமாக சிவஞானம் சிறீதரன் எம்.பி. தமிழகம் சென்று வாழ்த்துக் கூறும் படங்கள் ஊடகங்களில் வெளிவந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கட்சியின் உத்தியோகபூர்வ வாழ்த்தை அறிக்கையாக விடுவார் எனவும் எதிர்பார்க்கலாம்.

தேர்தல் காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சனை, இதற்கான தீர்வுத் தேடல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம், தாமதமாகும் மாகாண சபைத் தேர்தல் போன்ற எதனையுமே தெரிவிக்காத தமிழக விடுதலைக் கழகத்துக்கு யாராவது முதலில் பாடம் எடுத்து விளங்க வைக்க வேண்டும். இல்லையெனில் எதனையும் புரிந்து கொள்ள முடியாது பதிலளிக்க முடியாததாகவே நிலைமை அமையலாம்.

தமிழக தேர்தல் மற்றும் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலை பற்றி கிழக்கிலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருடன் இன்று சம்பாசித்தபோது கள நிலைவரத்தை பின்வருமாறு விபரித்தார்:

‘இந்தியாவில் திராவிடம் என்ற பெயரில் 1949ல் உருவாகி இதுவரை தமிழகத்தை ஆட்சி புரிந்தவர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். அதே 1949ல் இலங்கையில் உருவான தமிழரசுக் கட்சியும் இப்போது திராவிட அரசியல் நிலைமைக்குத்தான் வந்துவிட்டது. 2001 ஜனவரியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி அதன் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியை மூத்த தமிழ்க் கட்சி என்ற நிலையில் தமிழரசுக் கட்சிக்கு வழங்கியது. அதுவே இன்றுவரை அக்கட்சிக்கான பிராணவாயுவாக (லைஃப் சப்போர்ட்) இருந்து வருகிறது. எவ்வளவு காலத்துக்கு பிராண வாயு வழங்கி ஒன்றை தக்க வைத்திருக்க முடியும்’ என்று விளங்கும் மொழியில் கூறினார்.

திராவிட மாயையை ஒழிக்க தமிழகத்தில் ஒரு விஜய் வந்ததுபோன்று, தமிழ்த் தேசியத்தை பாதுகாத்து முன்னெடுக்க ஒருவர் எப்போது வருவார்? இதற்குக் காத்திருக்க நேருமாயின் உள்ளிருப்பவர்களே கச்சிதமாக தமிழரசுக் கட்சியை முடித்து விடுவார்கள் என்றார் ஆய்ந்தோய்ந்து நோக்கும் அந்தப் பல்கலைக் கழக விரிவுரையாளர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியும் பாரம்பரிய அரசியல் மாயையின் உடைவும்



-யதீந்திரா



அண்மையில் தமிழ் நாட்டு அரசியலில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. அதனை சிந்தனை மாற்றம் என்று கூற முடியுமா என்றால், இல்லை - அப்படியாயின் அது எவ்வாறான மாற்றம்? அறுபது வருடகால திராவிட அரசியல் பாரம்பரியத்தை, மூன்றே வருடங்களில் ஒரு புதிய கட்சியால் சரிக்க முடிந்திருக்கின்றது - அதிலும் அரசியல் அனுபவம் இல்லாத வெறும் சினிமாப் பிரபலத்தை மட்டுமே கொண்டிருந்த ஒருவரால் எவ்வாறு இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளை கீழ்நிலைக்கு தள்ள முடிந்தது? இந்த அடிப்படையில் நோக்கினால் - இது ஒரு அரசியல் மாற்றமா என்றால் நிச்சமாக அரசியல் மாற்றம்தான். ஏனெனில் பாரம்பரிய கட்சிப் பிடியிலிருந்து, ஒரு தலைமுறையானது, புதிய ஒன்றை நோக்கி சாய்ந்திருக்கின்றது - ஒரு புதிய இடம் தேவை என்று எண்ணியிருக்கின்றது - அந்த வகையில் இது ஒரு அரசியல் மாற்றம்தான். அந்த மாற்றத்தை விஜய் முறையாக கையாளுவாரா - அவரால், திராவிட மொடல் என்று கூறப்படும் ஒன்றிற்கு மாற்றாக த.வெ.க மொடல் ஒன்றை ஏற்படுத்த முடியுமா? அவரது ஆட்சிதான் இந்தக் கேள்விகளுக்கான பதிலை தீர்மானிக்கும். அவர் சரியான பாதையில் சென்றால், அவர் மாற்றங்களின் தூதுவராக இருப்பார் இல்லாவிட்டால், ஒரு அரசியல் சிதைவின் அடையாளமாகி, காணாமல் போவார். ஒரு வெற்றியின் பின்னர், அந்த வெற்றியை தக்கவைப்பது என்பது முற்றிலும் ஒரு கட்சியினுடைய, அதன் தலைவருடைய ஆளுமை சார்ந்தது.

உண்மையில் நடிகர் ஜோசப் விஜயின் வெற்றியானது தமிழ் நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் ஒரு சரித்திர வெற்றி என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை. தமிழ் நாட்டு அரசியல் பற்றி பேசிக் கொண்டிருந்த போது, ஒரு நண்பர் என்னிடம் சில கேள்விகளை தொடுத்திருந்தார் - அதாவது, நீங்களும் ஒரு சிரேஸ்ட அரசியல் அவதானி, ஆய்வாளர் - தொடர்ந்தும் எழுதி வருகின்றீர்கள் - சொல்லுங்கள் ஏன் (தமிழ் நாட்டு) அரசியல் ஆய்வாளர்கள் என்போர் எவ்லோருமே தமிழக வெற்றிக் கழகத்தை ஒரு சவாலான கட்சியாக கணித்திருக்கவில்லையே! - புதுடில்லியை தளமாகக் கொண்டிருந்தவர்களை தவிர, தமிழ் நாட்டு அரசியல் அவதானிகள் என்போர் அனைவருமே திராவிட முன்னேற்ற கழகத்திற்கு போட்டியே இல்லை - தமிழக வெற்றிக் கழகம் சில ஆசனங்களை எடுத்தாலே, அது ஆச்சிரியமானது என்றல்லவா எழுதியும் பேசியும் வந்தனர். தங்களுக்கு அருகிலுள்ள விடயங்களையே கணிக்கத் தெரியாத இவர்கள் என்ன வகையான ஆய்வாளர்கள் - அந்த நண்பர் இப்படிக் கேள்விகளை அடுக்கினார்.

அந்த நண்பரின் கேள்விகள் முற்றிலும் சரியானது - அதே வேளை தமிழ் நாட்டு தேர்தல் தொடர்பான கணிப்புக்களை வெளியிட்ட நிறுவனங்கள் எவையுமே, நடிகர் விஜய் ஒரு சவால்மிக்க அரசியல் சக்தியாக எழுச்சியுறுகின்றார் என்பது பற்றி வாய்திறக்கவில்லை.

ஒரு புதிய அரசியல் அலையை ஏற்படுத்த முடியாமையின் மீதான வெறுப்புத்தான், ஜனாதிபதி அனுர அலையில் தமிழர்கள் கணிசமாக அள்ளுண்டு போக நேர்ந்தது. ஒரு புதிய அலையை ஏற்படுத்தக் கூடிய ஆற்றலும் ஆப்பணிப்பும் உள்ள ஒரு அரசியல் இயக்கத்தினால், ஈழ அரசியலின் திசையை எப்போது வேண்டுமனாலும் மாற்றியமைக்க முடியும். இது தொடர்பில் இளைய தலைமுறையினர் சிந்திக்கத் தொடங்கினால் அதுவே மாற்றத்தின் ஆரம்பமாக அமையும்.

ஏன் அவர்களால் தமிழக வெற்றிக் கழகத்தை மையப்படுத்திய அரசியல் அலையை மதிப்பிட முடியாமல் போனது? இத்தனைக்கும் தேர்தல் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டுவந்த ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்களில் பலர் நீண்ட அனுபவங்களைக் கொண்டவர்கள். அப்படியிருந்தும் தங்களுக்கு அருகில் ஏற்பட்டுக் கொண்டிருந்த அரசியல் அலையைக் கூட, கண்டுகொள்ளாதவர்களாக இருந்திருக்கின்றனர் என்னும் போது, ஒரு சமானியன் நமது ஆய்வாளர்கள் என்போர் தொடர்பில் சந்தேகம் கொள்வது சரியானதுதான். என்னுடன் பேசிய அந்த நண்பர் இப்படியும் கேட்டார், எங்கள் மத்தியிலும் பல ஆய்வாளர்கள் இருக்கின்றனர் - இவர்களும் பல விடயங்களை கூறுகின்றனர் ஆனால் இந்த ஆய்வாளர்களின் கதைகளை எப்படி நம்புவது என்னும் கேள்விதான் எழுகின்றது. ஏனெனில் தங்களுக்கு அலுகிலுள்ள விடயங்களையே ஓரளவாவது கணிக்கத் தெரியாதவர்கள் இந்தியா, அமெரிக்கா என்றால்லாம் கதைகள் புனைவதை எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? அந்த நண்பரின் கேள்வி முற்றிலும் நியாயமானதுதான்.

இந்தியா முழுவதும், நீண்டகாலமாக செல்வாக்குச் செலுத்திய மானிலக் கட்சிகள் வீழ்சியை சந்தித்திருக்கின்றன. 17 ஆண்டுகளாக கேரளாவில் ஆட்சி செய்த பினராயி விஜயன் தலைமையிலான, கம்யூனிஸ்ட்டுக்களின் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. 15 ஆண்டுகளாக, மேற்கு வங்கத்தில் ஆட்சியில் இருந்த மம்தாவின் ஆட்சியை பாரதிய ஜனதா கட்சி முடிவுக்கு கொண்டுவந்துவிட்டது. சங்கிகள் அனைத்து இடங்களிலும் புகுந்து விட்டனர், சங்கிகள் சதி செய்கின்றனர் என்றெல்லாம் கூறுவதானது, அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை மதிப்பிட முடியாதவர்களின் பிரச்சினையாகும். தலைமுறை மாறுகின்ற போது, அது வரையில், செல்வாக்குச் செலுத்திய கட்சிகளின் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தங்களுடைய கட்சிச் சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் ஒரு கட்சி மாற்றிக்கொள்ள முயற்சிக்காத போது, ஒரு புதிய கட்சி அல்லது இன்னொரு கட்சி அந்த இடத்தை நிரப்புகின்றது. தமிழ் நாட்டில் நடந்திருப்பது இதுதான்.

பாரம்பரிய கட்சிகள் அசைக்க முடியாதவை - புதிய கட்சி ஒன்றால் அவர்களை நெருங்கவே முடியாது என்னும் பார்வைகள் காலத்திற்கு ஏற்புடையவை அல்ல - என்பது தற்போது தமிழ் நாட்டு தேர்தல் முடிவுகளால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதனை சினிமாவின் தாக்கம் என்று கூறிவிட்டு சாதாரணமாக கடந்து செல்ல முற்பட்டால், அது தவறானது. மேலும் திராவிட கட்சிகள் இரண்டினது வளர்ச்சியிலும் சினிமாவின் தாக்கம் ஆழமானது. சினிமாச் செல்வாக்கு தமிழ் நாட்டு அரசியலில் இரண்டறக் கலந்திருக்கின்றது. ஆனால் அதற்காக சினிமாச் செல்வாக்கு மட்டுமே ஒரு கட்சியின் வெற்றியை தீர்மானித்துவிடும் என்று கணிப்பது தவறானது. தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியானது நீண்டகாலமாக புதிய அரசியல் முகம் ஒன்றை தேடிக் கொண்டிருந்தவர்களின் தெரிவு. மேலும், நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவே தெரிகின்றது. இதற்காக அவருக்கு பின்னால் வெளித்தெரியாத மூளைகள் நீண்டகாலமாக உழைத்திருக்கலாம்.

தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியானது, பாரம்பரிய கட்சி, மக்களுக்குத் தெரிந்த கட்சி, தெரிந்த சின்னம் - எனவே அவற்றை வீழ்த்துவது முடியாத காரியம் என்றெல்லாம் பேசப்படும் அரசியல் பேச்சுக்களை பெறுமதியிழக்கச் செய்திருக்கின்றது. மக்கள் தங்களின் விருப்பத்தை, ஆர்வத்தை எந்தவொரு கட்சிக்கும் குத்தகைக்கு விடவில்லை - இது இல்லாவிட்டால் அது என்னுமடிப்படையில் சிந்திப்பதற்கான இடைவெளி மக்கள் மத்தியில் எப்போதுமே உண்டு. ஆனால் நான்தான் - நாங்கள்தான் அந்த மாற்று என்பதை மக்களை நம்பச் செய்வதில்தான் ஒரு கட்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது. நமது அரசியல் சூழலிலும் தமிழரசு கட்சி ஒரு பாரம்பரிய கட்சி, அதனைவிட்டால் மக்களுக்கு வேறு தெரிவில்லை - எப்படியோ வாக்குச் சாவடிக்கு சென்றால் மக்கள் வீட்டுச் சின்னத்திற்குத்தான் வாக்களிப்பார்கள் என்பதெல்லாம் ஒரு அரசியல் பொய். புதியதொரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்னும் அர்ப்பணிப்புடனும் மக்களை வசியப்படுத்தும் கவர்ச்சியான அரசியலுடன், ஒரு அணி களமிறங்குமானால், தமிழரசு கட்சியின் கதையும் முடிவுக்கு வரும்.

யுத்தத்திற்கு பின்னரான கடந்த 17 ஆண்டுகளில் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவதில் எவராலும் வெற்றிபெற முடியவில்லை - இந்த வெற்றிபெற முடியவில்லை என்பதுதான், இலங்கை தமிழரசு கட்சியை விட்டால் வேறு வழியில்லை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்தான் அடுத்த தெரிவு - அதற்கப்பால் சென்றால் தங்களை ஒரு கூட்டுக்குள் வைத்திருக்கும் கட்சிகள். இவ்வாறான கட்சிகள் தேர்தலுக்காக தங்களுக்குள் பிளவுறுவதும் பின்னர் தேர்தலுக்காக தங்களுக்குள் உடைவதுமாகவே 17 ஆண்டுகள் சென்றிருக்கின்றன. ஆனால் புதிய சூழ்நிலையை புரிந்து கொண்டு, இளைய தலைமுறையை அரசியலின் பக்கமாக ஈர்க்கக் கூடிய அரசியல் மாற்றம் இதுவரையில் நிகழவில்லை. ஒரு புதிய அரசியல் அலையை ஏற்படுத்த முடியாமையின் மீதான வெறுப்புத்தான், ஜனாதிபதி அனுர அலையில் தமிழர்கள் கணிசமாக அள்ளுண்டு போக நேர்ந்தது. ஒரு புதிய அலையை ஏற்படுத்தக் கூடிய ஆற்றலும் ஆப்பணிப்பும் உள்ள ஒரு அரசியல் இயக்கத்தினால், ஈழ அரசியலின் திசையை எப்போது வேண்டுமனாலும் மாற்றியமைக்க முடியும். இது தொடர்பில் இளைய தலைமுறையினர் சிந்திக்கத் தொடங்கினால் அதுவே மாற்றத்தின் ஆரம்பமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விஜய் எப்படி ரசிகர்களை வாக்காளர்களாக மாற்றினார்?



நிலாந்தன்

விஜய் வெற்றி பெற்ற பின், நடிகர் சத்யராஜ் சொன்னார் “தமிழக அரசியலில் மக்கள் அரசியல் மயப்படுத்தப்படவில்லை, ரசிகர் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்” என்று. புதுடில்லியை மையமாகக் கொண்ட அரசியல் ஆய்வாளராகிய ராஜன்குறை கிருஷ்ணன் கூறுகிறார் “தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒரு கட்சிக்கு தேவையான கட்டமைப்புகள், பலமான வேட்பாளர்கள் போன்ற எவையும் தேவையில்லை என்று விஜய் நிரூபித்துள்ளார்..” வேர்ச்சுவலாக - மெய்நிகர் பரப்பில் ரசிகர்கள் மத்தியில் தன்னைக் கட்டமைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார் என்ற பொருள்பட.

விஜய் கட்சியை தொடங்கிய போது தமிழகத்தைச் சேர்ந்த ஓர் அரசியல் விமர்சகர்- அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் என்பது மட்டும் அவருடைய பெயரில் இருந்து ஞாபகம் இருக்கிறது - சொன்னார், விஜய் தன்னுடைய ரசிகர்களை வாக்காளர்களாக மாற்றுவதற்கு குறிப்பிட்ட ஒரு காலகட்டம் தேவை என்று. எல்லா மாவட்டங்களிலும் அவர் ரசிகர்களை வாக்காளர்களாய் மாற்றுவதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் எடுக்கும். எனவே உடனடியாக வரக்கூடிய தேர்தலில் அவர் முழு அளவு வெற்றியை பெறும் வாய்ப்புகள் இல்லை என்று.

விஜய் வெற்றி பெறப் போகிறார் என்பதை “அக்சஸ் இந்தியா” வின் கணிப்பீடு முன்கூட்டியே சொன்னது. பிரசாந்குமார் அதை அடித்துக் கூறினார். ஆனால் பெரும்பாலான தமிழக ஊடகங்களும், அரசியல் விமர்சகர்களும் அதை முன்கூட்டியே கணித்திருக்கவில்லை. அதற்கு காரணம், ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் கட்சிகளுக்கு விசுவாசமாகச் சிந்தித்தமைதான் என்று ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அவ்வாறு அரசியல் விமர்சகர்கள் மற்றும் ஊடகங்களிடமிருந்த முற்சாய்வு அல்லது முற்கற்பிதம்தான் விஜயின் வெற்றியை அவர்கள் முன்கூட்டியே உணர முடியாமல் போனதற்கு காரணமா? அல்லது குறிப்பாக அரசியல் விமர்சகர்கள் வழமையான பாரம்பரிய அளவுகோல்களின் அடிப்படையில் இந்தத் தேர்தலை அணுகியது ஒரு காரணமா?

விஜய் பெற்ற வெற்றிக்கு “ஜெனரேஷன் ஸற்” அல்லது ஜென்சி என்று அழைக்கப்படும் புதிய தலைமுறையின் செல்வாக்கே காரணம் என்றொரு விளக்கம் உண்டு. அந்த தலைமுறையினரால் “பூமர் மாமாக்கள்” என்று நக்கலாகக் குறிப்பிடப்படுகின்ற நடுத்தரவயதைக் கடந்த ஒரு தலைமுறையானது இந்த ஜெனரேஷன் ஸற்றுடைய மண்டைக்குள் என்ன இருக்கிறது என்பதைச் சரியாகக் கணிக்கத் தவறியது என்றும் ஒரு விமர்சனம் முன் வைக்கப்படுகிறது.

தமிழில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய ஜெயமோகன் விஜயின் வெற்றி தொடர்பாகப் பேசியுள்ளார், அதில் அவர் தர்மராஜ் என்பவர் எழுதிய ஜல்லிக்கட்டுப் போராட்டம் தொடர்பான நூலை வாசிக்குமாறு கேட்டிருக்கிறார். ஜல்லிக்கட்டு எழுச்சியை முன்னெடுத்த ஜென்சி இளையோரின் மனோநிலை தொடர்பாக தர்மராஜ் எழுதியுள்ளார். ஒரு தலைமுறை போராட்டத்தை, அரசியலை களியாட்டமாகப் பார்க்கிறது, எதையும் “vibe-வைஃப்-அதிர்வாக மாற்றும் ஒரு மனோநிலை. அதாவது சோடா போல பொங்கி வெடித்து எழுவதைத்தான் அவர்கள் அரசியலாக விளங்கி வைத்திருக்கிறார்கள். சீரான தொடர்ச்சியான மாற்றங்களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை -” என்று அந்நூலில் கூறப்படுவதை ஜெயமோகன் சுட்டிக் காட்டுகிறார். இந்தோனேசியாவில், பங்களாதேஷில், நேபாளத்தில், இலங்கையில் இடம்பெற்ற அரகலயவில். இப்பண்பு அதிகம் காணப்பட்டதாகவும் ஜெயமோகன் தொகுத்துக் கூறுகிறார்.

தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த பின்னணிக்குள் ஈழத்தமிழ் சமூக வலைத்தளங்களில் ஒரு யுடியூப்பர் பின்வரும் பொருள்பட எழுதியிருந்தார். “எங்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் பம்பல். ஆனால் பூமர் மாமாக்களுக்கு அது சீரியஸாகத் தெரிகிறது” என்று.



> **கூட்டத்துக்கு வரும் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? ரசிகர்கள் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? மக்களை அரசியல் மயப்படுத்துவது, அமைப்பாக்குவது தொடர்பான பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? திராவிட மொடல் மீது தமிழக மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியா? அல்லது ஆய்வாளர்களின் அளவுகோள்களுக்குள் வராத இலத்திரனியல் உளவியலா?**

அப்படியென்றால் விஜய்க்கு விழுந்த வாக்குகள் பெரும்பாலானவை ரசிக மனோ நிலையோடு ஒரு நாயக பிம்பத்தை நோக்கி குவிக்கப்பட்ட வாக்குகளா? தமிழகத்தில் மதுரவாயில் பகுதியில் வசிக்கும் ஓர் ஈழத் தமிழர் சொன்னார், தான் கடைக்குப் பொருள் வாங்கப் போன போது அங்கிருந்த தமிழக வாக்காளர்களோடு உரையாடியதாக. யாருக்கு வாக்களித்தீர்கள் என்று கேட்டபோது “விசிலுக்கு” என்று கூறியிருக்கிறார்கள். “உங்களுடைய தொகுதியில் யார் வேட்பாளர்?” என்று கேட்டபோது, அவர்களுக்குத் தெரியவில்லை. பெரும்பாலான ஆய்வாளர்கள் இப்பொழுது அதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தமது தொகுதி வேட்பாளர் யார் என்று தெரியாமலே வாக்களித்திருக்கிறார்கள்.

விஜயின் வேட்பாளர்களில் அனேகமானவர்கள் ஏற்கனவே பெரிய அளவுக்கு பிரபல்யமானவர்கள் அல்ல. இம்முறை தேர்தலில் ஒரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பதையும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். விஜயின் வேட்பாளர்களில் பலர் பெரியளவுக்குக் காசைக் கொட்டி வெற்றி பெறவில்லை. காசு கொடுத்து வெல்லலாம் என்ற ஏற்கனவே இருந்து வந்த தமிழக தேர்தல் பாரம்பரியத்தை விஜயின் ஒருபகுதி வேட்பாளர்கள் உடைத்திருக்கிறார்கள். விஜய் தன்னுடைய தேர்தல் பிரச்சார உரைகளில் அதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். யார் தந்தாலும் காசை வாங்குங்கள். ஆனால் வாக்குகளை விசிலுக்குக் கொடுங்கள் என்று.

தமது தொகுதி வேட்பாளர் யார் என்று தெரியாமலேயே விஜய்க்குத் தமிழக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு இரண்டு பிரதான காரணங்கள்தான் இருக்கலாம். ஒன்று, ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டபடி இலத்திரனியல் பிரஜைகளின் செல்வாக்கு, அவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள மூத்தவர்களை விஜய்க்கு வாக்களிக்குமாறு தூண்டியதோடு, தாங்களும் வாக்களித்திருக்கிறார்கள்.

இரண்டாவது, ஆளுங்கட்சிக்கு எதிரான அதிருப்தி. கிட்டத்தட்ட 60 ஆண்டு கால திராவிட ஆட்சிகளின் மீதான அதிருப்தி. இந்த மாற்றத்தை தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது உணர்ந்ததாக சினிமா இயக்குனராகிய தங்கர் பச்சான் தனது முகநூல் தளத்தில் தேர்தலுக்கு முன்னரே பதிவிட்டிருந்தார். தங்கர்பச்சான் வேறு ஒரு கட்சிக்காகப் பிரச்சாரம் செய்தவர்.

இவ்வாறு திராவிட மொடலுக்கு மாற்றாக தமிழக வாக்காளர்கள் விஜயைப் பார்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டிருக்கிறது. அதன் விளைவாக இதுவரை காலமும் தமிழக அரசியலில் நிலவிய இருமுனைப் போட்டி இப்பொழுது மும்முனைப் போட்டியாக மாறியிருக்கிறது. அதேசமயம் திரைத்துறைக்கூடாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நாயக பிம்பத்துக்குக் கிடைத்த வெற்றி அது என்று தெரிகிறது. இனி விஜய், தான் ஒரு திரை நாயகன் மட்டுமல்ல, தனக்கு வாக்களித்த மக்களுக்குப் பொறுப்புக்கூறும் ஒரு தலைவனும்தான் என்பதனை நிரூபிக்க வேண்டியிருக்கும். எம்ஜிஆர் அதை நிருபித்தார். விஜய் நிருபிப்பாரா?

எம்ஜிஆர் அரசியலில் பெற்ற வெற்றிகளின் அடுத்த கட்ட வெற்றிதான் ஜெயலலிதா. இப்பொழுது விஜய், என்று ராஜன்குறை கூறுகிறார். எம்ஜிஆரின் காலத்தில் சமூக வலைத்தளங்கள் இருக்கவில்லை. கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு எம்.ஜி.ஆருக்கு ஐந்து ஆண்டுகள் எடுத்தன. ஆனால் விஜய் 26 மாதங்களில் அதைச் செய்திருக்கிறாரா?

பாரம்பரிய அளவுகோள்களின்மூலம் அவரை அளந்த விமர்சகர்கள் பலரும் அவர் இக்குறுகிய காலகட்டத்திற்குள் தன் கட்சிக் கட்டமைப்புகளைக் கட்டியெழுப்ப முடியாது என்று ஒரு வழமையான கணக்கை முன்வைத்தார்கள். அது பௌதீகரீதியாக பிழை அல்ல. ஆனால் அதைவிட மேலதிகமாக ஒன்று வெற்றியை தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதாக இருந்திருக்கிறது என்பதைத்தான் விஜயின் வெற்றி உணர்த்துகிறது.


விஜய் மிகக் குறுகிய காலகட்டத்திற்குள் தன் கட்சியைக் கட்டியெழுப்பவில்லை என்று ஒருபகுதி தமிழக அவதானிகள் கூறுகிறார்கள். அவர் கட்சி தொடங்குவதற்கு முன்னரே மக்கள் நலன்புரி அமைப்பு ஒன்றை வைத்திருந்தார் என்றும், அதனை அவர் ஒரு கட்சிக்குரிய கருநிலைக் கட்டமைப்பாக ஏற்கனவே கட்டியெழுப்பி வைத்திருந்தார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தவிர கடந்த சில தசாப்தங்களாக தன்னை ஓர் அரசியல் இரட்சகராகச் சித்தரிக்கும் நாயக பிம்பத்தை தனது திரைப்படங்கள் ஊடாக அவர் திட்டமிட்டு படிப்படியாக கட்டமைத்து வந்தார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தமிழகத்தின் கூட்டு உளவியலை அடிப்படையாக வைத்துக் கூறின், எனவே விஜயின் வெற்றி தற்செயலானதோ அல்லது திடீரென்று ஏற்பட்ட ஒன்றோ அல்ல என்றும் அவர்கள் கூறுகிறார்கள். விஜய் அதற்காக பல தசாப்தங்கள் திட்டமிட்டு உழைத்திருக்கிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

யார் எதைக் கூறினாலும் தேர்தல் முடிவுகளைக் குறித்த பாரம்பரிய அளவுகோள்களால் விஜய்க்குள்ள மக்கள் ஆதரவை சரியாக மதிப்பிட முடியவில்லை என்பது மட்டும் உண்மை. குறைந்தபட்சம் திராவிட கட்சிகள் மீது தமிழக மக்களுக்கு உள்ளுறையும் வெறுப்பு உண்டு என்பதனையும் ஊடகங்களும் விமர்சகர்களும் பெரிய அளவுக்கு கண்டுகொள்ளவில்லையா?

கூட்டத்துக்கு வரும் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? ரசிகர்கள் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? மக்களை அரசியல் மயப்படுத்துவது, அமைப்பாக்குவது தொடர்பான பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? திராவிட மொடல் மீது தமிழக மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியா? அல்லது ஆய்வாளர்களின் அளவுகோள்களுக்குள் வராத இலத்திரனியல் உளவியலா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகள் பத்தோடு பதினொன்றாக மாறிவிடக்கூடாது!



- கந்தையா அருந்தவபாலன்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல்கால வாக்குறுதிகளில் ஒன்று புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குதலாகும். அவ்வாறு புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுமானால் அதில் தமிழ் மக்களுக்கான ஆட்சிக் கட்டமைப்பு வடிவத்தை தமிழ்த்தரப்புகளின் ஒருமித்த கோரிக்கையாக முன்வைப்பதற்கான தேவை குறித்து பலதரப்புகளாலும் உணரப்பட்ட நிலையில், பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின் பாராளுமன்றில் உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலில் அழைப்புவிடுத்தபோது தமிழரசுக்கட்சி அப்போது அது அவசியமில்லை என்றுகூறி அதனை நிராகரித்துவிட்டது. எனினும் பின்னர் அந்நோக்கத்துக்காக அக்கட்சி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியதாக அறிவித்தது. அதே வேளை சுவிஸ் தூதரகமும் அதுபோன்ற ஓர் முயற்சியை மேற்கொண்டபோதும் அது தொடக்கத்திலேயே தடைப்பட்டு விட்டது. தற்போது தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை, தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபை என்பன அச்செயற்பாட்டில் இறங்கியுள்ளன. நோக்கங்கள் ஒன்றெனினும் இயங்குநிலை வேறாகவுள்ள இவ்விரு அமைப்புகளும் ஒன்றுக்கொன்று போட்டியானவையா? அல்லது துணைநிற்கப் போகின்றனவா? என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

கட்சிகளோ அன்றி அமைப்புகளோ எதுவாயினும் முன்மொழிகின்ற தமிழ் மக்களுக்கான ஆட்சிக் கட்டமைப்பு தொடர்பான எந்தவொரு தீர்மானமும் இறுதியில் அம்மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அவ்வாறு குறித்த தீர்மானம் மக்களால் ஏற்றுக்கொள்ளப் படவேண்டுமானால் அம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலைமை இருக்கவேண்டும். அவ்வாறின்றி அவற்றுக்கிடையில் கருத்து வேற்றுமைகள் உருவாகுமானால் எத்தகைய முயற்சியும் வெற்றியடையப் போவதில்லை. இதனை இம்முயற்சிகளில் ஈடுபடும் கட்சிகள் மட்டுமன்றி சிவில் பிரதிநிதிகள், அமைப்புகள், ஏற்பாட்டாளர்கள் அனைவரும் கருத்தில் கொள்ளவேண்டும். அந்தவகையில் இப்பொழுது துருவப்பட்டுச்செல்லும் தமிழ்ச் சட்டத்தரணிகள் அமைப்புக்கும் ஈழமக்கள் அரசியலமைப்பு நிர்ணயசபைக்கும் இது பொருந்தும்.

தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் முன்னெடுப்புக்கு முன்னதாகவே தமிழ்த் தேசிய பேரவை அரசியலமைப்புக்கான முன்மொழிவுகளை ஆராய்வதற்காக ஈழமக்கள் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபையை உருவாக்கியதுடன் அதில் கலந்து கொள்ளுமாறு ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்து. அவை அதில் பங்கெடுக்காத நிலையிலும்கூட சட்டத்தரணிகள் பேரவையின் அழைப்பையேற்று கஜேந்திரகுமார் தரப்பினர் முழுமனத்துடன் அப்பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்டமை ஆரோக்கியமானது மட்டுமன்றி வரவேற்கப்படவேண்டிய விடயமுமாகும். இதன்மூலம் அவர்களால் உருவாக்கப்பட்ட அவ்வமைப்பு சட்டத்தரணிகள் பேரவைக்குப் போட்டியானது ஒன்றல்ல என்பது வெளிப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும் தற்போது சட்டத்தரணிகள் பேரவையின் கூட்டங்களில் இனிக் கலந்துகொள்ளப் போவதில்லை என்ற அவர்களின் முடிவும் அதற்காக அவர்கள் சட்டத்தரணிகள் பேரவைமீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளும் கருத்தில் கொள்ளப் படவேண்டிய விடயங்களாகும்.

மாலையில் நடக்கவிருந்த கூட்டத்தில் கலந்துகொள்ளும் தமது உறுப்பினர்க்கான ஒப்புதலை பேரவை காலையில் தந்து நிகழ்நிலையில் கலந்து கொள்ள அனுமதித்த போதும் பின்னர் அதனை சுமந்திரன் தடுத்ததினால் பேரவை மறுத்தமை, தமது ஒப்புதல் இல்லாது சுமந்திரனின் கோரிக்கையை ஏற்று நிபுணர் குழு ஒன்றை உருவாக்கியமையும் பேரவையின் முடிவாக அதனை அறிவித்தமையும், முதலில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளையே அழைப்பது என்ற பேரவையின் முடிவை தன்னிச்சையாக மாற்றி தமிழ் மக்கள் கூட்டணியை கூட்டத்துக்கு அழைத்தமை, சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் இணைக்கவேண்டும் என்ற தமது கோரிக்கையை நிராகரித்தமை போன்ற பல குற்றச்சாட்டுகளை தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைமீது கஜேந்திரகுமார் முன்வைத்திருப்பதைக் காண முடிகிறது. இக்குற்றச் சாட்டுகள் தொடர்பான எந்தவொரு கருத்துக்களையும் இதுவரை சட்டத்தரணிகள் பேரவை முன்வைக்கவில்லை. ஆனால் இக்குற்றச் சாட்டுகளிலிருந்து சுமந்திரனின் விருப்பத்துக்கேற்ப சட்டத்தரணிகள் பேரவை பக்கச்சார்பான முறையில் இயங்குகிறதா என்ற ஐயம் ஒன்று மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த ஐயத்தைக் களையவேண்டிய பொறுப்பு சட்டத்தரணிகள் பேரவைக்கு உள்ளது.

இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒரு புள்ளியில் ஒன்றிணைப்பது என்பது கல்லில் நாருரிப்பதைப் போன்ற ஒரு முயற்சியாகும். சுயநலன், கட்சி நலன், ஒருசில தலைவர்களின் தன்முனைப்பு (ஈகோ) போன்றன கட்சிகளை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பெருந்தடையாக உள்ளன. இது தமிழ்ச் சட்டத்தரணி பேரவைக்கு பெருஞ் சவாலான விடயம் என்பதை மறுப்பதற்கில்லை. இப்பேரவையின் உறுப்பினர்கள் அரசியலமைப்பு மற்றும் சட்டம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்களாகவும் சட்டத்தரணிகளுமாகவும் இருந்தாலும்கூட எமது தமிழ்த் தேசியக் கட்சிகளை கையாளுவதற்கு அவை போதுமானவையல்ல. அதற்கான அரசியல் முன் அனுபவம் மட்டுமல்ல இக்கட்சிகள்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய சமூக அங்கீகாரமும் தனித்துவமும் அவசியமானவையாகும். தமிழ்த் தேசிய கட்சிகளை ஒரு புள்ளியில் குவிப்பதற்காக இதுவரை பல முயற்சிகள் பல தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அவை எவையுமே எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்பதே கடந்தகால கசப்பான அனுபவம். இத்தோல்விக்கான காரணிகளைக் கண்டறிவது சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிக்கு மேலும் வலுச்சேர்க்கும்.

இவ்வாறான கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஒருவரோ அன்றி ஒரு குழுவோ இறங்கும்போது அவர்களின் பின்னால் யார் உள்ளார்கள், அதன்பின்னால் உள்ள நோக்கம் என்ன என்ற ஐயங்களும் கூடவே எழுந்து விடுகின்றன. இது ஒவ்வொரு கட்சியையும் சுதாகரிக்கச் செய்துவிடுகிறது. அதனால் அக்கட்சித் தலைவர்களிடம் உருவாகும் முற்சாய்வின் அடிப்படையிலேயே அவர்களது அனைத்து அணுகுமுறைகளும் அமைந்துவிடுகின்றன. தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவைக்கும் இது பொருந்தும். தொடக்கத்தில் இப்பேரவையின் பின்னால் கஜேந்திரகுமார் இருப்பதாகப் பேசப்பட்டது. இப்போது சுமந்திரன் இருப்பதாகப் பரவலாகப் பேசப்படும் அதேநேரம் சுவிஸ் தூதரகம் இருப்பதாகவும் ஐயங்கள் எழுந்துள்ளன. இத்தகைய ஐயங்கள் ஆரோக்கியமான பங்கெடுத்தலுக்கும் பொருத்தமான தீர்மானங்களுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடுகின்றன. அதேநேரம் கட்சிகளும் தலைவர்களும் தேர்தல்களுக்கும் அதன்மூலமான பதவிகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதால் இவ்வாறான ஒன்றுபடுத்தும் முயற்சிகளை அந்த இலக்குகளை அடையும் வகையில் அத்தலைவர்கள் கையாள முயற்சிப்பதையும் காணமுடியும்.

இவ்வாறான ஒரு களநிலையில் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் நடவடிக்கைகள் மிக நிதானமாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் அமையவேண்டும். இல்லாவிடில் அதன் பெறுமதி மிகுந்த முயற்சிகள் பத்தோடு பதினொன்றாகப் பயனற்றுப் போய்விடும். இன்றைய நிலையில் அப்பேரவையின் கூட்டங்களில் பங்கெடுக்கும் கட்சிகள் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பவையாகும். இக்கட்சிகள் மூன்றும் ஏற்கனவே ஒரு அணியாகத்தான் உள்ளன. எனவே இக்கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கு சட்டத்தரணிகள் பேரவையின் உழைப்பு அதிகம் தேவையில்லை. இவர்களுடன் தமிழ்த் தேசிய பேரவையையும் இணைத்துச் செல்வதே பேரவைக்குள்ள முக்கிய பணியாகும். இதனால் அத்தரப்பினர்க்கு ஏற்பட்டுள்ள ஐயங்களை களைவதுடன் தனது பக்கச்சார்பின்மையை உறுதிப்படுத்துவதும் பேரவையின் பொறுப்பாகும். அதேபோல பேரவையின் முயற்சி வெற்றியளிக்கவேண்டுமானால் கட்சித் தலைவர்கள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல்களை ஒருபுறம் தள்ளிவிட்டு திறந்த மனத்துடன் ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக எனக்கு எல்லாம் தெரியும், நான் சொல்வதை எல்லோரும் ஏற்கவேண்டும் என்ற வழமையான அணுகுமுறையை சுமந்திரன் கைவிடவேண்டும். அதேபோல எந்த ஒற்றுமை முயற்சிக்கும் ஒத்துவரமாட்டார் என்று தன்மீது உருவாகியுள்ள விம்பத்தை உடைப்பதற்கு கஜேந்திரகுமார் இன்னும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். அதுவே மக்களுக்காக அவர்கள் செய்யும் உண்மையான அரசியலாக அமையும். ●

> **தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் நடவடிக்கைகள் மிக நிதானமாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் அமையவேண்டும். இல்லாவிடில் அதன் பெறுமதி மிகுந்த முயற்சிகள் பத்தோடு பதினொன்றாகப் பயனற்றுப் போய்விடும். இன்றைய நிலையில் அப்பேரவையின் கூட்டங்களில் பங்கெடுக்கும் கட்சிகள் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பவையாகும். இக்கட்சிகள் மூன்றும் ஏற்கனவே ஒரு அணியாகத்தான் உள்ளன. எனவே இக்கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கு சட்டத்தரணிகள் பேரவையின் உழைப்பு அதிகம் தேவையில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலுவிழந்த மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு!
# ஊடுறுவும் உக்ரைனின் ட்ரோன் போரியல்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இரண்டாம் உலகப் போரின் போது செய்யப்பட்ட பாரிய தியாகங்களைக் கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் மே 9ம் நாள் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் பீரங்கிகள் அணிவகுத்துச் செல்வதுடன், கிரெம்ளினுக்கு மேலே போர் விமானங்கள் கர்ஜித்து பறந்து செல்லும். மேலும் ரஷ்ய வீரர்கள் படை படையாக அணிவகுத்துச் செல்வர். பல தசாப்தங்களாக, இந்த அணிவகுப்பு சோவியத் இராணுவப் பெருமை, தேசியப் பெருமிதம் மற்றும் ஒரு முக்கிய உலக வல்லரசாக ரஷ்யாவின் அடையாளமாக விளங்கியது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த வெற்றி நாள் அணிவகுப்பு ரஷ்யாவின் தேசிய பெருமையின் அரசியல் மேடையாக மாறுகிறது. இரண்டாம் உலகப்போரில் நாசி ஜெர்மனியை தோற்கடித்த மகத்தான தேசப்பற்று போர் நினைவாக நடத்தப்படும் இந்த அணிவகுப்பு, சாதாரண இராணுவ நிகழ்ச்சி அல்ல் அது ரஷ்யாவின் உலக அரசியல் அறிவிப்பாகும்.

நாசி ஜெர்மனிக்கு எதிரான தனது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை, மாஸ்கோவில் நடைபெறும் வெற்றி நாள் அணிவகுப்பில் ரஷ்யா மாபெரும் கொண்டாட்டங்களுடன் நினைவுகூர்வது வழமையாகும். மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு, இருபதாம் நூற்றாண்டின் இராணுவ மரபுகளான பெரும் படைகள், கனரக கவச வாகனங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது. இதற்கு மாறாக, உக்ரைனின் ட்ரோன் போர், பரவலாக்கப்பட்ட தொழில்நுட்பம், டிஜிட்டல் நுண்ணறிவு மற்றும் விரைவான தகவமைப்பு ஆகிய இருபத்தியோராம் நூற்றாண்டைப் பிரதிபலிக்கிறது.

ஆயினும் சமீபத்திய ஆண்டுகளில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் காரணமாக மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு வியத்தகு முறையில் மாறியுள்ளது. உக்ரைனில் நடக்கும் போர், குறிப்பாக ட்ரோன் தாக்குதல் பரவலான பயன்பாட்டின் மூலம், நவீன போரையே மாற்றியமைத்துள்ளது. அணிவகுப்பின் போது ரஷ்யா தனது பாரம்பரிய இராணுவ பலத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினாலும், உக்ரைனில் உள்ள போர்க்களம் ஒரு வேறுபட்ட யதார்த்தத்தை வெளிப்படுத்து வருகிறது.

இந்த மாற்றம், போரின் எதிர்காலம் குறித்த முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. பீரங்கிகள் வழக்கொழிந்து வருகின்றனவா என்ற சந்தேகம் எழுகிறது. பெரிய இராணுவ சக்திகளால் இன்னும் சிறிய நாடுகளை மரபுசார் படைபலத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்த முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. உக்ரைன் போர், வெறும் அளவை விட தொழில்நுட்பத் திறமையே இப்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

போர்கள் இனி பீரங்கிகள், ஏவுகணைகள் மற்றும் பெரும் படைகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. ஆளில்லா விமானப் போர் நவீன மோதலின் ஒரு புதிய கட்டத்தில் உள்ளது. அத்துடன் மலிவான ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு ஆகியவை மோதல்களின் எதிர்காலத்தை அதிகளவில் வடிவமைத்து வருகின்றன. இதனாலேயே மாஸ்கோ அணிவகுப்பிற்கும் உக்ரைனின் ஆளில்லா விமானப் போருக்கும் இடையிலான வேறுபாடு, பழைய இராணுவச் சின்னங்களுக்கும் புதிய இராணுவத் தொழில்நுட்பத்திற்கும் இடையிலான மோதலைப் பிரதிபலிக்கிறது.

### மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு அர்த்தம்:


விளாடிமிர் புட்டினின் கீழ், இந்த அணிவகுப்பு புவிசார் அரசியல் வலிமையின் வெளிப்பாடாகவும் மாறியுள்ளது. ரஷ்யா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், கவச வாகனங்கள், மேம்பட்ட போர் விமானங்கள் மற்றும் உயரடுக்கு துருப்புக்களை இராணுவ மேலாதிக்கத்தின் பிம்பத்தை வெளிப்படுத்த காட்சிப்படுத்துகிறது. ரஷ்ய குடிமக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியை அனுப்பும் வகையில் இந்த அணிவகுப்பு கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ரஷ்யா ஒரு வலிமையான உலகளாவிய சக்தியாகத் தொடர்வதை








> சமீபத்திய ஆண்டுகளில், மாஸ்கோ வெற்றி அணிவகுப்பு வியத்தகு முறையில் மாறியுள்ளது. உக்ரைனில் நடக்கும் போர், குறிப்பாக ட்ரோன் தாக்குதல் பரவலான பயன்பாட்டின் மூலம், நவீன போரையே மாற்றியமைத்துள்ளது. அணிவகுப்பின் போது ரஷ்யா தனது பாரம்பரிய இராணுவ பலத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினாலும், உக்ரைனில் உள்ள போர்க்களம் ஒரு வேறுபட்ட யதார்த்தத்தை வெளிப்படுத்து வருகிறது.



உறுதி செய்யும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உக்ரைனில் நடக்கும் போர் இந்த நிலையை தற்போது சிக்கலாக்கியுள்ளது. மேற்கத்தியத் தடைகள், இராணுவ இழப்புகள் மற்றும் போர்க்களச் சிக்கல்கள் ரஷ்யாவின் வழக்கமான இராணுவ உத்தியில் உள்ள பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளன. சமீபத்திய சில அணிவகுப்புகளில் குறைவான பீரங்கிகளும் கவச வாகனங்களும் தோன்றியதால், ரஷ்யாவின் இராணுவ வளங்கள் உக்ரைனில் உள்ள போர்முனைகளுக்குத் திருப்பி விடப்படுகின்றனவா என்ற கேள்வி பார்வையாளர்களிடையே எழுந்தது.

### உக்ரைன் ட்ரோன் போரியல்:

உக்ரைன் போரில் ஏற்பட்ட மிக முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்று ட்ரோன்களின் தீவிரமான பயன்பாடு ஆகும். உக்ரைன் ட்ரோன் தொழில் நுட்பத்தை ஒரு துணைக் கருவியிலிருந்து போரின் மைய ஆயுதமாக மாற்றியுள்ளது. பெரும்பாலும் இராணுவ நோக்கங்களுக்காக மாற்றியமைக்கப்பட்ட சிறிய வர்த்தக ட்ரோன்கள், விலை உயர்ந்த கவச வாகனங்கள் மற்றும் இராணுவ உள்கட்டமைப்புகளுக்கு எதிராக மிகவும் திறம்பட செயல்படுகின்றன.

உக்ரைனியப் படைகள் கண்காணிப்பு, பீரங்கி ஒருங்கிணைப்பு, உளவு மற்றும் நேரடித் தாக்குதல்களுக்கு ட்ரோன்களைப் பயன்படுத்துகின்றன. பல சமயங்களில், ஒப்பீட்டளவில் மலிவான ட்ரோன்கள் மில்லியன் கணக்கான டாலர் மதிப்புள்ள டாங்கிகளை அழித்துள்ளன என்றும் கூறப்படுகிறது. இதற்கு மேலாக ரஷ்யாவின் ட்ரோன் தொழில் நுட்பத்தில் அதிதீவிரமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தற்காலத்தில் நவீனப் போர்முறை வளர்ச்சி அடைந்தாலும், களமுனையில் சமச்சீரற்றதாக மாறிவருகிறது என்பதை இந்த உக்ரேனிய மோதல் நிரூபித்துள்ளது. தொழில்நுட்பப் புதுமைகளைக் கொண்ட ஒரு சிறிய படையால் ஒரு பெரிய இராணுவ சக்திக்கு சவால் விட முடியும். உக்ரைனின் விரைவாகத் தகவமைத்துக் கொள்ளும் திறன், உலகெங்கிலும் உள்ள இராணுவ வியூகவாதிகளின் உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. இதே போல் ஈரான் போரில் அமெரிக்க வியூகம் தோல்வியை சந்தித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் ட்ரோன் போர்முறை, இராணுவத் தொழில்நுட்பத்தின் நவீன மயமாக்கலையும் பிரதிபலிக்கிறது. போர் விமானங்கள் அல்லது ஏவுகணை அமைப்புகளைப் போலல்லாமல், ட்ரோன்களை மலிவாக உற்பத்தி செய்ய முடியும். தொலைவிலிருந்து இயக்க முடியும். மற்றும் விரைவாக மேம்படுத்த முடியும். பொறியாளர்கள் மற்றும் தனியார் தொழில்நுட்பக் குழுக்கள் என அனைவரும் உக்ரைனின் ட்ரோன் திறன்களுக்குப் பங்களித்துள்ளனர்.

அத்துடன் ட்ரோன்கள் போரின் உளவியல் தன்மையை மாற்றியுள்ளன. போர்க்களத்தில் உள்ள வீரர்கள் இப்போது தொடர்ச்சியான வான்வழி கண்காணிப்பை எதிர்கொள்கின்றனர். பெரும்பாலும் முன்னறிவிப்பின்றி, மேலிருந்து திடீரெனத் தாக்குதல்கள் நிகழலாம். இது தொடர்ச்சி



யான பதற்றத்தையும் அச்சத்தையும் உருவாக்கி, போர்ச் சூழல்களை அடிப்படையாக மாற்றியுள்ளது.

### பாரம்பரியப் போரின் வீழ்ச்சி:

அமெரிக்கா, சீனா போன்ற பெரும் நாடுகள் கூட உக்ரைனிலிருந்து கிடைத்த பாடங்களை உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றன. உலகெங்கிலும் உள்ள இராணுவங்கள் ட்ரோன்கள், இணையப் போர், மின்னணுப் போர் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் பெருமளவில் முதலீடு செய்து வருகின்றன. எதிர்காலப் போர்கள், பாரம்பரிய போர்க்கள அமைப்புகளைக் குறைவாகவும், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் தகவல் ஆதிக்கத்தை அதிகமாகவும் சார்ந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

அதே நேரத்தில், ட்ரோன் போர்முறை புதிய நெறிமுறை சார்ந்த கவலைகளை அறிமுகப்படுத்துகிறது. பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் எளிதாக இலக்காகலாம், கண்காணிப்பு தொடர்ச்சியாகிறது, மேலும் ஆயுதங்கள் பொறுப்புக்கூறல் மற்றும் மனிதக் கட்டுப்பாடு குறித்த அச்சங்களை எழுப்புகின்றன.

மாஸ்கோ வெற்றி அணிவகுப்பும் உக்ரைனின் ட்ரோன் போர்முறையும் இராணுவ வரலாற்றின் இரண்டு வெவ்வேறு காலகட்டங்களைக் குறிக்கின்றன. இந்த அணிவகுப்பு சோவியத் வெற்றியின் மரபு, வழக்கமான இராணுவ வலிமை மற்றும் தேசியச் சின்னத்தைப் பிரதிபலிக்கிறது. உக்ரைனின் ட்ரோன் பயன்பாடு, நவீன மோதலின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெவ்வேறு விபத்துக்களில் இளைஞன் உட்பட மூவர் பலி!

கொழும்பு, மே 10

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் இளைஞன் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

இதன்படி, மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கட்டுவெல்லேகம - அளுத்பொல வீதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.

அளுத்பொலவிலிருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி, பின்னால் அமர்ந்து வந்தவர் மற்றும் ஒரு சிறுவன் ஆகியோர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். விபத்தில் உயிரிழந்தவர் துனகஹ பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் என தெரியவந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் மேலதிக சிகிச்சைகளுக் காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன் விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கொடதெனியாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு - குருநாகல் வீதியின் உடுகொடகெதர சந்தியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

வீதியை கடக்க முயன்ற பாதசாரியான முதியவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் திவுலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் என தெரியவந்துள்ளது.

திவுலப்பிட்டிய வைத்தியசாலையிலிருந்து கம்பஹா வைத்தியசாலைக்கு மாற்றப்படும் போது செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம், மாவனெல்லை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவனெல்லை - அளுத்நுவர வீதியின் அழுபத்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த முதியவர் தனது காரை ஓட்டிச் சென்று, வீட்டின் அருகே வந்ததும் அதிலிருந்த 15 வயது சிறுவனிடம் காரை ஓட்டக் கொடுத்துள்ளார். பின்னர் அவர் காரின் முன்பக்கமாக வீதியை கடக்க முயன்றபோது, கார் முன்னோக்கி நகர்ந்ததால் அவர் மீது கார் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மாவனெல்லை பகுதியைச் சேர்ந்த 86 வயதுடைய முதியவர் என தெரியவந்துள்ளது. (எ)

# எக்னெலிகொடவின் வழக்கு 21ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே. 10

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அவர்களின் வழக்கு, நேற்று முன் தினம் விஜேராமவில் அமைந்துள்ள விசேட நீதிமன்றத்தில் இரண்டாவது நாளாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவிடம் ஊடகவியலாளர் வழக்கு பற்றியும் அவரின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பற்றி கேட்டபோது, அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

நேற்று முன் தினத்திற்காக 87ஆவது மற்றும் 79ஆவது சாட்சிகளிடம் விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதில் 79ஆவது சாட்சி நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது சாட்சியத்தை வழங்கினார். எனினும், 87ஆவது சாட்சி சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. மற்றைய சாட்சிக்கு மீண்டும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன் மேலும் 5 சாட்சிகளுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணை எதிர்வரும் மே மாதம் 21-ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரிவினரின் அழுத்தம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. தற்போது அது மரண அச்சுறுத்தல் விடுக்கும் நிலைக்குச் சென்றுள்ளது. இது குறித்து கடந்த வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். இன்று இது தொடர்பான மேலதிக விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தோம். ஆனால், காவல்துறை இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளது. அந்த விசாரணைகளின் முன்னேற்றத்துடன், அடுத்த வழக்குத் தவணையில் எனது சட்டத்தரணி இது குறித்த மேலதிக விவரங்களை நீதிமன்றத்தில் முன்வைப்பார். (அ)

# பழங்குடியின கிராமத்தின் புதிய தலைவர் நியமனம்

கொழும்பு, மே. 10

ரதுகலப் பகுதியின் புதிய ஆதிவாசித் பழங்குடியின கிராமத்தின் தலைவராக தானிகல மஹா பண்டாரலாகே நிஷாந்த குமார எத்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் காலமான பழங்குடியின கிராமத்தின் தலைவர், ஊருவரிகே மகா பண்டாலகே சுதா வன்னில அத்தோவின் புதல்வர் ஆவார்.

மறைந்த தலைவர் சுதா வன்னில அத்தோ பயன்படுத்திய வில் மற்றும் கோடரி புதிய தலைவரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

# வலுவிழந்த மாஸ்கோ வெற்றி...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறிவரும் யதார்த்தத்தைக் குறிக்கிறது் இதில் தொழில் நுட்பம், தகவமைப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவை பாரம்பரிய இராணுவ மேலாதிக்கத்திற்கு சவால் விடக்கூடும்.

உலகம் செஞ்சதுக்கக் கொண்டாட்டங்களையும், உக்ரைன் மீதான ட்ரோன்கள் நிறைந்த வானத்தையும் உற்று நோக்கும் போது, போர்முறை ஒரு வரலாற்று மாற்றத்திற்கு உள்ளாகிவருகிறது என்பது மேலும் மேலும் தெளிவாகிறது. பீரங்கிகள் மற்றும் பிரம்மாண்டமான இராணுவ அணிவகுப்புகளின் காலம் முற்றிலுமாக மறைந்து விடவில்லை, ஆனால் அது இப்போது ட்ரோன்கள், நெறிமுறைகள் மற்றும் டிஜிட்டல் போர்முறை ஆகி யவற்றுடன் களத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

இன்றைய சூழலில் "வானத்தை யார் கட்டுப்படுத்துகிறார்கள்?" என்பதற்குப் பதிலாக "குறைந்த செலவில் யார் அதிக குழப்பத்தை உருவாக்க முடிகிறது?" என்பதே முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது. ட்ரோன்கள் இந்த மாற்றத்தின் அடையாளமாக உள்ளன. இதனால் பாரம்பரிய ராணுவ அணிவகுப்புகள் கூட சில நேரங்க ளில் பழைய காலத்தின் சக்தி காட்சியாகத் தோன்றுகின்றன.

இதேவேளை ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடை யிலான மோதல், இறுதியில் ஒரு புவிசார் அரசியல் போராட்டமாக மட்டுமல்லாமல், இருபத்தியோராம் நூற்றாண்டின் போர்க்களத்தின் எதிர்காலத்தை வெளிப்படுத்திய போராக மாறியுள்ளது. ●

# அரை நூற்றாண்டு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவான கொள்கை கிடையாது. திராவிட இயக்க கட்சிளுக்கு ஏற்பட்ட தோல்வி தற்காலிக இடையூறா அல்லது நிரந்தர அஸ்தமனத்தை நோக்கிய பயணத்தின் தொடக்கமா என்பதை பல கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைக்கும் விஜய் ஆட்சிமுறையின் சிக்கல்களை எவ்வாறு கையாளுவார் என்பதிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கிறது.

இறுதியாக, விஜய்யின் வெற்றி பெரும்பாலான அரசியல் அவதானிகளினாலும் ஊடகங்களினாலும் புவியி யல் ரீதியாக, நிலநடுக்கத்தின்போது பூமியின் அடுக்குக ளில் ஏற்படும் மிகப்பெரிய மாற்றத்துடன் ஒப்பிடப்பட்டது. இனிமேல் எதுவும் இருக்காது என்கிற அள வுக்கு அடிப்படை மாற்றம் நிகழ்ந்துவிட்டது என்று கூறுவதற்கே அவர்கள் முற்படுகிறார்கள்.

ஆனால், எம். ஜி.ஆரின் கட்சி சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்து சுமார் அரை நூற்றாண்டுக்கு பின்னரும் கூட ஆட்சி மாற்றத்துக்கு சினிமா மாயையின் மூலமாக உருவாக்கப்பட்ட பிம்பமே தேவைப்படும்போது இதில் அரசியல் நிலநடுக்கம் நிகழ்ந்திருப்பதாக எவ்வாறு கூறமுடியும்?

விஜய்யின் இன்றைய எழுச்சி திரையில் மிகவும் கவனமாக உருவாக்கப்பட்ட அடையாளங்கள் வலிமை யான அரசியல் மூலதனமாக மாறும் நீண்ட காலப் போக்கின் பிந்திய ஒரு அத்தியாயமே தவிர, வேறு ஒன்றுமில்லை. ●

# வளர வேண்டும் இணைய ...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயந்திரத் தீர்ப்பு எங்கே? இதற்கான ஒழுக்கம் இன்றே தேவை.

இதில் கல்வியின் பங்கு மிகப் பெரியது. பள்ளிகளில் இணையத்தைப் பயன்படுத்த கற்பிப்பது மட்டும் போதாது. இணையத்தில் எப்படி பொறுப்புடன் வாழ வேண்டும் என்பதையும் கற்பிக்க வேண்டும். உண்மை சரிபார்ப்பு, தரவுப் பாதுகாப்பு, இணைய மரியாதை, தொழில்நுட்ப விழிப்புணர்வு இவை எதிர்காலக் கல்வியின் அங்கமாக வேண்டும். புதிய சமூக ஒழுக்கம் பெரிய கோட்பாடுகள் மட்டும் அல்ல் அன்றாட நடைமுறைகள்.

சரிபார்க்காமல் பகிராதிருத்தல் பிறரின் அனுமதி இல்லாமல் தகவல் பகிராதிருத்தல் வெறுப்பைத் தூண்டாதிருத்தல் தொழில்நுட்பத்தைக் கருவியாகப் பயன்படுத்துதல் அதற்குள் அடிமையாவதைத் தவிர்த்தல் - இவை சாதாரண பழக்கங்கள் அல்ல் எதிர்கால நாகரிகத்தின் ஒழுக்க அடித்தளங்கள்.

இணைய உலகில் உருவாகும் புதிய சமூக ஒழுக்கம் குறித்துப் பேசும்போது சமூக ஊடகங்களின் தாக்கத்தைப் பிரித்துப் பார்க்க முடியாது. இன்று பலருக்கு உலகைப் புரிந்துகொள்வதற்கான ஜன்னல் செய்தித்தாளோ, நூலகமோ அல்ல் சமூக ஊடகமே.

இதன் நல்ல பக்கம் என்னவென்றால் குரலற்றவர்களுக்கு குரல் கிடைக்கிறது. ஒரு கிராமத்தில் நடந்த அநீதி இன்று உலகளாவிய விவாதமாக மாற முடிகிறது. இது இணையத்தின் ஜனநாயக ஆற்றல். ஆனால், இதே தளங்கள் வெறுப்பை பரப்பவும் பயன்படுகின்றன.

இன்றைய இளைஞர்கள் இணையத்தில் தங்கள் அடையாளத்தை உருவாக்குகிறார்கள். முன்பு மனிதனை அவன் குடும்பம், ஊர், வேலை, கல்வி ஆகியவை அடையாளப்படுத்தின. இன்று இணையப் பக்கமும் அடையாளமாகிறது. இணையத்தில் நாம் காட்டும் "நான்" உண்மையானதா அல்லது கட்டமைக்கப்பட்டதா?. இதுவும் ஒழுக்கப் பிரச்னை.

கல்வி உலகில் இணையம் பெரிய புரட்சி செய்துள்ளது. கிராமத்து மாணவர் உலகத் தரமான பாடங்களைப் பார்க்க முடிகிறது. ஆனால், அதே நேரத்தில் நகலெடுக்கும் பழக்கம், செயற்கை உதவியை தவறாகப் பயன்படுத்துதல், முயற்சி இல்லாத கற்றல் போன்ற சிக்கல்களும் வந்துள்ளன.

செயற்கை நுண்ணறிவு உதவியால் கட்டுரை எழுத முடிகிறது. சிந்தனை இல்லாமல் முழுவதும் அதன்மீது சார்ந்துவிட்டால் கற்றலின் திறன் குறையும். கருவி உதவியாக இருக்க வேண்டும் சிந்தனைக்கு மாற்றாக அல்ல் இது எதிர்காலக் கல்வி ஒழுக்கம்.

வளர்ந்த நாடுகளில் இந்த விவாதங்கள் சட்டமாக மாறுகின்றன. செயற்கை நுண்ணறிவு எப்படி பயன்படுத்தப்பட வேண்டும், தரவு யாருடையது, குழந்தைகளின் இணையப் பாதுகாப்பு எப்படி இருக்க வேண்டும் - இவை கொள்கை விவாதங்கள். ஆனால், வளர்ந்து வரும் நாடுகளில் இவை சமூக விழிப்புணர்வு விவாதங்களாக அதிகம் இருக்கின்றன.

இந்தியச் சூழலை எடுத்துக்கொண்டால், இணையம் சமூக மாற்றத்துக்கும் சமூக மோதலுக்கும் இரண்டுக்குமான இடமாக உள்ளது. ஒருபுறம் மாணவர்கள் இலவசமாகக் கற்கிறார்கள். விவசாயிகள் தகவல் பெறுகிறார்கள். சிறு தொழில்கள் வளர்கின்றன. மறுபக்கம் பொய்யான செய்திகள், வெறுப்புச் செய்திகள், மோசடிகள், தரவுத் திருட்டு ஆகியவை அதிகரிக்கின்றன. இதனால் இணைய வளர்ச்சி மட்டுமே போதாது. இணைய நாகரிகமும் தேவை.

ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் கல்வி, மருத்துவ அணுகலுக்கு இணையம் பாலமாகிறது. இது தொழில்நுட்பத்தின் மனிதநேய முகம். அதே நேரத்தில் அணுகல் சமத்துவம் இல்லாவிட்டால் புதிய எண்மமயத்தால் ஏற்றத்தாழ்வும் உருவாகலாம்.

இணைய மோசடிகளும் ஒரு பெரிய சிக்கலாக உள்ளது. இதனால், இணையப் பாதுகாப்பு என்பது தொழில்நுட்பப் பிரச்னை மட்டுமல்ல. நம்பிக்கை ஒழுக்கம் தொடர்பான பிரச்னை.

மனிதனால் உருவாக்கப்பட்ட இணையம் மனிதனை மாற்றுகிறது. மனிதன் தன் உருவாக்கத்தை ஒழுக்கத்தால் வழிநடத்த வேண்டும். இல்லையெனில், உருவாக்கம் உருவாக்கியவனை ஆளத் தொடங்கும்.

வளர்ந்த நாடுகள் சட்டங்களால் இதைக் கட்டுப்படுத்த முயல்கின்றன. வளர்ந்துவரும் நாடுகள் விழிப்புணர்வால் இதைச் சமாளிக்க முயல்கின்றன. உண்மையான தீர்வு ஒழுக்கமே் சட்டம் கட்டுப்படுத்தலாம் ஆனால், ஒழுக்கம் உள்ளே இருந்து வழிநடத்தும்.

ஒரு சமூகத்தின் உண்மையான வலிமை, அதன் தொழில்நுட்பம் அல்ல் அதன் மனிதநேயம். இணைய உலகில் புதிய சமூக ஒழுக்கம் என்பது மனிதனைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட விதி அல்ல. அது மனிதனை மனிதனாக வைத்திருக்க உருவாக்கப்பட்ட வழிகாட்டி.

தொழில்நுட்பமும் மனிதநேயமும் வளர்ந்தால்தான் இணைய உலகம் உண்மையான நாகரிக உலகமாகமாறும்.

(தினமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழகத்தில் புதிய...

கிடைத்துள்ளதால் ஆட்சியமைக்க விஜய் உரிமை கோரினார்.

சுமார் 2 மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின்போது த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்த கட்சிகளின் தலைவர்களும் உடன் இருந்தனர்.

இதன் பின்னர் ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில், "சி. ஜோசப் விஜய்யை தமிழ்நாட்டின் முதலமைச்சராக நியமித்து, அமைச்சரவையை அமைக்குமாறு" ஆளுநர் அழைத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவியேற்பு விழா இன்று காலை 10 மணிக்கு நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் என்றும், இதன் பின்னர் மே 13ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சட்டமன்றத்தின் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோருமாறு விஜயை ஆளுநர் அறிவுறுத்தியதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக பெரும்பான்மை ஆதரவை பெறுவதற்கான முயற்சிகளை த.வெ.க. முன்னெடுத்து வந்த நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆதரவு நேற்று அறிவிக்கப்பட்டது.

த.வெ.கவுக்கு ஆதரவு அளித்தற்கான கடிதத்தை அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் த.வெ.க. பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவிடம் வழங்கினார்.

ஆதரவுக் கடிதத்தைப் பெற்ற பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த ஆதவ் அர்ஜ/னா, காங்கிரஸ், இடதுசாரிகள் மற்றும் விசிக என அனைவருக்கும் நன்றி என்று தெரிவித்தார்.

அதோடு, "ஜனநாயகம் காக்கப்படும், மக்களின் ஆதரவுடன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக விஜய் உருவாகிறார்" என்று தெரிவித்தார்.

த.வெ.க. ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்து கட்சித் தலைவர் திருமாவளவன் பெயரில் வழங்கப்பட்டுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கடிதத்தில், "அக்கட்சியின் 2 சட்டப்பேரவை உறுப்பினர்கள் சார்பாக, தமிழ்நாட்டில் அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்திற்காக ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என கூறப்பட்டுள்ளது.

இந்த ஆதரவு நிபந்தனையற்றது எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆதரவானது, அன்று தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்கு நிலையான மற்றும் ஜனநாயக ஆட்சியை உறுதி செய்யும் நலன் கருதி வழங்கப்படுகிறது எனவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

த.வெ.கவுக்கு ஆதரவுக் கடிதம் வழங்கிய பின் செய்தியாளர்களைச் சந்தித்த வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன், மக்கள் நலக்கூட்டணி உருவான காலத்தில் இருந்து கொள்கை அடிப்படையில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறோம். அதன்படி அரசியல் நெருக்கடி உருவாகியுள்ள சூழலில் இடதுசாரிக் கட்சிகளும் வி.சி.கவும் த.வெ.கவை ஆதரித்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

"அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதாலும் த.வெ.க. தலைவர் விஜய் ஆட்சியமைக்க வி.சி.க. நிலைப்பாடு தடையாக இருந்துவிடக் கூடாது என்ற எண்ணத்திலும் இந்த முடிவை நாங்கள் எடுத்துள்ளோம்" என்று அவர் கூறினார். (அ)

## புதிய அரசு...

பதிவிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், திராவிட முன்னேற்றக்கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு குறிப்பிடத்தக்க வாக்குகள் கிடைத்துள்ள போதிலும், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை கிடைக்கவில்லை.

புதிய அரசு அமைவதற்கு திராவிட முன்னேற்றக்கழகம் ஒருபோதும் இடையூறாக இருக்காது எனத் தெரிவித்துள்ள அவர், மக்கள் நலனை முன்னிறுத்தி ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக்கழகம் தனது கடமையைச் செய்யும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய விடயமாக, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணா அறிவாலயத்திற்கு வரவில்லை என ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரே நாளில் காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக்கழகம் உடனான உறவை முறித்துக்கொண்டு சென்றுள்ளதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அதேசமயம், கொள்கை அடிப்படையில் திராவிட முன்னேற்றக்கழகம் மீது நம்பிக்கை வைத்துள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், கம்யூனிஸ்ட் தலைவர்களான சண்முகம் மற்றும் வீரபாண்டியன் மற்றும் வைகோ, பிரேமலதா விஜயகாந்த், பேராசிரியர் காதர் மொகிதீன் உள்ளிட்ட தலைவர்கள், தமிழகத்தின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கைகோர்த்துப் போராடுவோம் என அறிவித்துள்ளமைக்கு அவர் தனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (அ)

## விடுதலை சிறுத்தைகள்...

தொல். திருமாவளவன் நேற்று தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி ஆதவ் அர்ஜுனாவிடம் நேரில் கையளித்துள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தமிழக வெற்றிக் கழகம் உருவெடுத்திருந்தபோதிலும், ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதில் இழுபறி நிலை நீடித்து வந்தது.

இந்நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இந்த உத்தியோகபூர்வ ஆதரவு கடிதம் மூலம், தமிழக வெற்றிக் கழக கூட்டணிக்குத் தேவையான 118 என்ற பெரும்பான்மை எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழகத்தில் நிலவி வந்த அரசியல் நிச்சயமற்ற தன்மை முடிவுக்கு வந்துள்ளதுடன், விஜய் முதலமைச்சராகப் பதவியேற்பதற்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் இனி விரைவுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழக வெற்றிக் கழகம் 107, காங்கிரஸ் கட்சி 5, சி.பி.ஐ., சி.பி.எம். ஆகிய கட்சிகள் 4, மற்றும் விசிக 2 என மொத்தமாக 118 சாதாரண பெரும்பான்மை பெற்று தமிழக வெற்றிக் கழகம் தமிழகத்தில் ஆட்சியமைக்கிறது.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மற்றும் தமிழக வெற்றிக்கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேவையான மருந்துகள்...

களஞ்சியசாலையை நேரில் பார்வையிட்டு, விபத்து குறித்து பணிப்பாளரிடம் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியசாலையில் நடைபெற்றது மிகவேதனைக்குரிய கவலைக்குரிய விடயமாகும். இதனால் பல கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

களஞ்சியசாலை தீ பற்றியதும் அதனை அணைக்க பூரண ஒத்துழைப்பு வழங்கிய வைத்தியசாலை ஊழியர்கள், யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவினர், இராணுவத்தினர், விமான படையினர், பொலிஸார் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

களஞ்சியசாலையில் இருந்த பெருமளவான மருந்துகள் தீயில் எரிந்துள்ளன. வைத்தியசாலைக்கு தேவையான மருந்துகளை துரித கதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சருடன் பேசியுள்ளேன்.

அதேபோன்று சேதமடைந்த களஞ்சியசாலையை மீள புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்துக்கான காரணம் மின் கசிவு என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது ஒரு நாசகாரச் செயலாக இருக்க முடியாது என நம்புகிறேன்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அரச பகுப்பாய்வு திணைக்களத்தினர் முன்னெடுக்கவுள்ளனர். அதற்கான அவர்கள் திங்கள்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுப்பார்கள் அவர்களின் இறுதி அறிக்கைகள் கிடைக்கப் பெற்ற பின்னரே விபத்துக்கான காரணத்தை உறுதியாக கூற முடியும்.

இந்த தீ விபத்தினால் பல கோடி ரூபாய் மருந்துகள் எரிந்து நாசமாகியுள்ளதுடன், பெரும் சொத்து சேதமும் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

## செம்மணி அகழ்வு...

பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

நேற்று நடைபெற்ற அகழ்வுப் பணிகளின்போது, ஒரு மனித என்புக்கூட்டு தொகுதி புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் , ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் 5 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 261 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## யாழ்.போதனா...

விரைந்து தீயை அணைக்க பெரும் போராட்டம் நடத்தினர்.

சுமார் 05 மணி நேர போராட்டத்தின் பின் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மருந்து களஞ்சியசாலைக்குள் எளிதில் தீ பற்றக்கூடிய அசிட் உள்ளிட்டவையும் காணப்பட்டமையால் தீ வேகமாக பரவியுள்ளது, இதனால் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகள், தீயில் ஏரிந்துள்ள நிலையில் கட்டடம் உள்ளிட்டவையும் கடும் சேதமடைந்துள்ளன.

தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து மருந்து களஞ்சியசாலையை சுத்தம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை , குறித்த களஞ்சியசாலை பகுதிக்குள் அண்மையில் மருந்துகளை பாதுகாப்பாக வைத்திருக்க குளிரூட்டப்பட்ட அறை அமைக்கப்பட்டதாகவும், அதில் ஏற்பட்ட மின் கசிவு, இந்த தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

தீ விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, வஹீ விபத்து ஏற்பட்ட மருந்து களஞ்சியசாலையை துப்பரவு செய்யும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

எஞ்சிய மருந்துப் பொருள்களை மீட்கும் முயற்சியிலும், களஞ்சியசாலையை துப்பரவு செய்து, அதனை ஒழுங்குபடுத்தும் பணிகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டனர். (அ)

## காலநிலை மாற்றத்தை...

சனிக்கிழமை ஆரம்பமானது. ஜனநாயக மற்றும் ஆளுகைக்கான நிறுவனம் , "கொன்ராட்-அடினாவர்-ஸ்டிப்டுங்" நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

"காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் இன்று நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். திடீரென ஏற்படும் கனமழை, வெள்ளம் மற்றும் நீண்டகால வறட்சி என்பன எமது வழமையான பருவகால எதிர்வுகூறல்களுக்கு அப்பாற்பட்டதாக மாறிவிட்டன. இம்மாற்றங்கள் எமது மக்களின் உணவுப் பாதுகாப்பையும் இன்று கேள்விக்குறியாக்கியுள்ளன.

குறிப்பாக, 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாட்டை உலுக்கிய "டித்வா" பேரிடர் எமது நினைவுகளில் இன்னமும் உள்ளது. மிகக்குறுகிய நாட்களில் கொட்டித் தீர்த்த கனமழையால் வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் அழிவுகள் ஏற்பட்டன. இவ்வாறான இயற்கைச் சீற்றங்களை நாம் இனிவரும் காலங்களில் அடிக்கடி எதிர்கொள்ள நேரிடும். எனவே, கடந்தகாலப் பேரிடர்களில் இருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டு, வருங்கால சவால்களை எதிர்கொள்வதற்கான முன்கூட்டிய தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த "டித்வா" பேரிடரின் போது உள்ளூராட்சி மன்றங்கள் களத்தில் நின்று சிறப்பாகச் செயலாற்றியிருந்தன. இருப்பினும், இவ்வாறான சவால்களைத் தற்காலிகமாக அன்றி, நிரந்தரமாக எதிர்கொள்ளும் வகையிலான கட்டமைப்பு ரீதியான தயார்படுத்தல்கள் எமக்குத் தேவை. எமது பாரம்பரிய விவசாய முறைகளைக் கூட காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களுடன் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்.

மக்களுடன் நேரடித் தொடர்பிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வாறான அறிவூட்டல்கள் வழங்கப்படுவது மிகவும் ஆரோக்கியமானது. எதிர்காலத்தில் காலநிலை ஆளுகை தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள் தமக்கேற்ற துணைவிதிகளை உருவாக்கி, தங்களைச் சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்" - என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், எதிர்க்கட்சி மற்றும் சபை உறுப்பினர்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படும் இச்செயலமர்வில் காலநிலை மாற்றம் குறித்த அடிப்படைத் தெளிவு, இலங்கை எதிர்கொள்ளும் பிரதான சவால்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் ஆகியன ஆராயப்படவுள்ளன. (அ)

## 60 வீதமான மருந்துகள்...

அது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில் குறித்த பகுதிகளை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்து களஞ்சியசாலையில் புற்றுநோய்க்கான மருந்துகள் , சத்திர சிகிச்சைக்கான மருந்துகள் உள்ளிட்ட பெறுமதியான மருந்துகள் பல பாதுகாக்கப்பட்டிருந்தன.

தீ விபத்தினால் அதில் சுமார் 60 வீதமானவை தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தற்போது வைத்தியசாலையின் அவசர தேவைக்கான மருந்துகள் , வைத்தியசாலையின் உள்ளக மருந்தகத்தில் காணப்படுகின்றன. அவற்றினைவிட மேலதிகமாக மாவட்டத்தின் பிற வைத்தியசாலைகள் மற்றும் வவுனியா, அநுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளிலும் இருந்து மருந்துகளை எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனூடாக எதிர்வரும் சில தினங்களுக்கு விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுவோர், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வருவோர் ஆகியோருக்கு மருந்துகளை விநியோகிக்க முடியும்

இதற்கு இடையில் கொழும்பில் இருந்து மருந்துகளை எடுத்து வர நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேவேளை தீ விபத்து தொடர்பிலான விசாரணைகளை அரச இராசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினரும் முன்னெடுக்கவுள்ளனர்.

அவர்கள் கொழும்பில் இருந்து திங்கள்கிழமையே வைத்தியசாலைக்கு நேரில் வந்து விசாரணைகளை முன்னெடுப்பார்கள். அதுவரை களஞ்சியசாலை பொலிஸாரின் பாதுகாப்பில் இருப்பதுடன் , தீயில் எரிந்த மருந்துகளையும் பாதுகாப்பாக வைத்திருந்து, அவர்களின் விசாரணைகளின் பின்னரே அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

## எயார்பஸ் விசாரணை...

ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளியானாலும், அப்போது அதிகாரபூர்வ கடிதம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம், எயார்பஸ் ஒப்பந்த விசாரணையுடன் தொடர்புடைய சிறீலங்கன் எயார்லைன்ஸ் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் மரணத்துக்குப் பின் 24 மணி நேரத்திற்குள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

## இலங்கை - இந்தியப் பயணிகள் கப்பல் நடு கடலில் பல மணி நேரம் தத்தளிப்பு

சென்னை, மே. 10

இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் இடையே இயக்கப்படும் பயணிகள் கப்பல், நேற்று முன் தினம் இரவு இயந்திர கோளாறு காரணமாக கடலில் பல மணிநேரம் தத்தளித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கப்பல் நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டது.

வழக்கமாக நான்கு மணிநேரத்தில் நாகப்பட்டினத்தை அடைய வேண்டிய நிலையில், மோசமான கடல் நிலை மற்றும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இரவு 10.45 அளவிலேயே கரையை அடைந்தது.

நாகப்பட்டினம் கடற்கரையிலிருந்து சுமார் இரண்டு கடல் மைல் தொலைவில் உள்ள கல்லார் பகுதிக்கு அருகே வந்தபோது, கப்பலின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது.

இதன்போது கப்பலில் 144 பயணிகள் இருந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தகவல் அறிந்த இந்திய அதிகாரிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கடலில் தத்தளித்த கப்பல் மெதுவாக இழுத்து வரப்பட்டு துறைமுகத்தைச் சென்றடைந்தது.

கப்பலில் இருந்த பயணிகள் அனைவரும் எவ்வித காயங்களுமின்றி பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## அநுராதபுரம் அட்டமஸ்தானத்தின் தலைமை தேரர் அதிரடியாக கைது!

கொழும்பு, மே. 10

அநுராதபுரம் அட்டமஸ்தானத்தின் தலைமை தேரரான பல்லேகம ஹேமரத்ன தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேகம ஹேமரத்ன தேரர் கைது செய்யப்பட்டமை தொடர்பான காரணிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என பல்லேகம ஹேமரத்ன தேரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நேற்று முன் தினம் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்தது.

இதன்போது, சந்தேக நபரான தேரர் மற்றும் குறித்த சிறுமியின் தாய் ஆகியோரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

அநுராதபுரம் நீதவான் சியபத் சசிந்து விக்ரமரத்ன, சந்தேக நபரான தேரருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த போதே தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## கபில சந்திரசேனவின் விசாரணை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிடம்

கொழும்பு, மே. 10

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பான விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கோட்டை நீதவான் பசன் அமரசேன வழங்கிய உத்தரவிற்கமைய, கொழும்பு பிரதான விசேட சட்ட வைத்திய அதிகாரி சிறீயந்த அமரரத்ன தலைமையில் 5 பேர் கொண்ட விசேட சட்ட வைத்திய நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் கொழும்பு நீதிமன்ற மருத்துவ மற்றும் நஞ்சியல் நிறுவனத்தில் உடற்கூற்று பரிசோதனையை முன்னெடுத்து வருகின்றனர்.

கபில சந்திரசேன தூக்கிட்டு, உயிரை மாய்த்துக் கொண்டிருக்கக்கூடும் என பொலிஸாரால் சந்தேகிக்கப்படும் நிலையில், இந்த மரணம் குறித்த மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு ஆரம்பித்துள்ளது. (அ)

## வழக்குகளின் முக்கிய சாட்சிகளை பாதுகாக்கவேண்டியது அவசியம்!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தல்

கொழும்பு, மே 10

நாட்டின் பிரதான ஊழல் வழக்குகளின் முக்கிய சாட்சிகள் மர்மமான முறையில் உயிரிழப்பது மிக ஆபத்தான மற்றும் பாரதூரமான ஒரு நிலைமையாகும். எனவே, பாரிய ஊழல் வழக்குகளின் முக்கிய சாட்சிகளையும், குற்றம் சாட்டப்பட்டவர்களையும் பாதுகாக்கவேண்டிய முழுப் பொறுப்பும் அரசாங்கத்துக்கே உரியதாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

சிறீலங்கா எயார்லைன்ஸின் முன்னாள் முக்கிய அதிகாரி கபில சந்திரசேனவுக்கு பிணை வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்படவிருந்த நிலையில் திடீரென உயிரிழந்தார். உண்மையில் இது மிக ஆபத்தான மற்றும் பாரதூரமான ஒரு நிலைமையாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், திறைசேரியில் 2.5 மில்லியன் டொலர் மோசடி நடந்தபோது, அரசாங்கம் தலையிட்டு அதன் கீழ் நிலை அதிகாரிகள் சிலரை பணிநீக்கம் செய்தது. அங்கு இந்த மோசடி குறித்து புகாரளித்த ரங்க ராஜபக்ஷ என்ற அதிகாரி மர்மமான முறையில் உயிரிழந்தார். இன்றுவரை அது தற்கொலையா அல்லது கொலையா என்று யாராலும் கூறமுடியாதுள்ளது.

அரசாங்கம் என்னதான் விளக்கமளிக்க முயன்றாலும் அந்த மரணத்தில் நியாயமான சந்தேகம் இருக்கிறது. எனவே, சர்வதேச விசாரணை ஒன்றையாவது நடத்தி அவரது மரணத்தின் உண்மைத் தன்மையைக் கண்டறியுமாறு நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டோம். ஆனால், அரசாங்கம் அதற்கு இன்னும் சாதகமான பதிலையும் அளிக்கவில்லை. உண்மையில் இங்கு என்ன நடக்கிறது?

இந்த மோசடிகளை மூடிமறைப்பதற்காகவே அந்த அதிகாரியின் உயிர் பறிக்கப்பட்டதா என்ற பலத்த சந்தேகம் நாட்டு மக்களிடையே உள்ளது. இப்போது அதே போன்றதொரு நிகழ்வுதான் இங்கும் நடந்துள்ளது. ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் எயார் பஸ் கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் கபில சந்திரசேன மீது மிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

எமக்குத் தெரிந்தவரை, இந்த வழக்கின் முக்கிய குற்றம் சாட்டப்பட்ட நபராகவும் இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மிக முக்கிய சாட்சியாகவும் இருந்த ஒரே நபர் கபில சந்திரசேன மட்டும்தான். ஆனால் இன்று அவரும் மர்மமான முறையில் உயிரிழந்தார். அவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது நமக்குத் தெரியாது. எனவே அரசாங்கம் இது குறித்து முறையான விசாரணை நடத்த வேண்டும்.- என்றார். (எ)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் தீயை கட்டுப்படுத்தியோருக்கு ஆளுநர் பாராட்டு



யாழ்ப்பாணம், மே. 10

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் எரிந்து மிகப் பெரிய சேதத்துக்குள்ளான மருந்துக் களஞ்சியத்தை, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் சென்று பார்வையிட்டு, வைத்தியசாலை பணிப்பாளரிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு ஆளுநரை அழைத்துச் சென்று நிலைமைகளை நேரில் விளக்கினார்.

இதன்போது, தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் தமது உயிரையும் பொருட்படுத்தாது, மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படையினருக்கு ஆளுநர் நேரில் சென்று தனது விசேட பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

"பெரும் சேதத்தைத் தணிப்பதற்கு நீங்கள் எடுத்த இந்த வீரமிக்க முயற்சிக்கு வார்த்தைகளால் நன்றி கூற முடியாது" என தீயணைப்பு வீரர்களிடம் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

அத்துடன், இத்தீயைக் கட்டுப்படுத்தும் கூட்டு முயற்சியில் உடனடியாகச் செயற்பட்டுச் சிறப்பான பங்களிப்பை வழங்கிய இராணுவத்தினர், விமானப் படையினர் மற்றும் பொலிஸாருக்கும் ஆளுநர் தனது கௌரவத்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

மேலும், இக்கட்டான இச்சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் இணைந்து செயலாற்றிய மருத்துவமனைப் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து மருத்துவமனை ஊழியர்களுக்கும் ஆளுநர் விசேட நன்றிகளைத் தெரிவித்தார். (அ)

## நாட்டில் சைபர் குற்றங்களை தடுக்கக் கடும் நடவடிக்கை!

### குறிப்பிட்ட நாடுகளில் இருந்து வருவோர் மீது விசேட சோதனை

கொழும்பு, மே. 10

சைபர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் நபர்களுக்கு விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் தங்கியிருந்து முன்னெடுக்கும் சைபர் குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பத்திராஜ இது குறித்துத் தெரிவிக்கையில்-

சைபர் குற்றங்களுக்காக வெளிநாட்டவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நாடுகளிலிருந்து வருபவர்கள் மீது மேலதிக கண்காணிப்பு முன்னெடுக்கப்படும்.

கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில், வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் உண்மையான நோக்கம் குறித்து அதிகாரிகள் தீவிரமாக ஆராய்வார்கள். அவர்கள் சட்டபூர்வமான சுற்றுலா அல்லது அங்கீகரிக்கப்பட்ட காரணங்களுக்காகவே வருகிறார்களா என்பது உறுதி செய்யப்படும்.

வானூர்தி நிலையக் கண்காணிப்புக்கு மேலதிகமாக, ஏற்கனவே இலங்கைக்குள் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் குறித்தும் காவல்துறையினரும் குடிவரவு அதிகாரிகளும் தனித்தனியாகப் பரிசோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் மூலம் சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோத சைபர் குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறியத் திட்டமிடப்பட்டுள்ளது.

சைபர் குற்றங்களில் ஈடுபடுவது கண்டறியப்படும் எந்தவொரு வெளிநாட்டவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதன் பின்னர் அவர்கள் இலங்கையிலிருந்து நாடுகடத்தப்படுவார்கள்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org